A/L 87
WEEKEND CLASSES
8-00 — 9-00 Botany
9-00 — 10-00 Zoology
10 00 —11-00 Chemistry
11-00—12-00 Physics
1-30—3-30 Pure / Applied Maths.
New Master
INSTITUTE
Navalar Road, Jaffna.

# சஞ்சீவி

விலை ரூ 2/-

அறிவு-ஆக்கம்-அபிவிருத்தி

A/L 87
ZOOLOGY
Mr. Naganathan
WEEKEND CLASSES
Monday Friday
8-30 — 10-30
DAY CLASSES
Monday Friday
10-30 — 12-30
New Master
INSTITUTE
Navalar Road, Jaffna.

மலே:• 2 யாழ்ப்பாணம் பிரபவ ஞு ஆனி ௴ 13 உ சனிக்கிழமை ஹிஜ்ரி 1407 ஷவ்வால் பிறை 29 (27-06 1987) SANJEAVY - REGENERATIVE TAMIL WEEKLY சிகரம்:•2$_2$

# விடுதலை இயக்கங்களை பாதுகாப்புப் படைகளாக அங்கீகரிக்க கோரிக்கை

## இந்திய அரசுப் பிரதிநிதிகளிடம் ஈழவர் முன்னணி நேற்று மகஜர்

— அலுவலகச் செய்தியாளர்: எஸ். ஜே. பி.ரட்ணதுரை —

யாழ்ப்பாணம், ஜூன் 27

தமிழீழ விடுதலை இயக்கங்களை தமிழ் மக்களின் சமூக, பாதுகாப்பு படைகளாக (சக்திகளாக) இந்தியா அங்கீகரிக்க வேண்டும்.

இந்தியப் பிரதிநிதிகளிடம் ஈழவர் முன்னணி நேற்று கையளித்த மகஜரில் இப்படிக் கோரிக்கை விடுக்கப்பட்டிருக்கிறது.

நேற்று நடைபெற்ற பெரும் பேரணி ஒன்றின் முடிவில் யாழ் செயலக முன்றலில் வைத்து இந்தியப் பிரதிநிதிகளிடம் இந்த மகஜர் கையளிக்கப்பட்டது.

''ஸ்ரீலங்கா அரசின் அடக்குமுறை நடவடிக்கைகளும் எமது கோரிக்கைகளும்'' என்ற தலைப்பில் கையளிக்கப்பட்ட இந்த மகஜரில் தமிழ் மக்களின் போராட்டத்தை அங்கீகரிக்கும் படி கோரப்பட்டிருக்கிறது.

மகஜரில் விடுக்கப்பட்டிருந்த ஏனைய கோரிக்கைகளாவன:-

★ தமிழ் மக்களின் தாயகத்தை அங்கீகரியுங்கள்.

★ அடக்குமுறைக்கு இலக்காகியிருக்கும் தமிழ் மக்களுக்கு எதிராக ஸ்ரீ லங்காவில் நிலைகொண்டிருக்கும் இஸ்ரவேல், பாகிஸ்தான் அமெரிக்கா, பிரிட்டன் ஆகிய நாடுகளின் பங்களிப்பை கண்டியுங்கள்.

★ சர்வதேச கூலிப் படைகளின் உதவியுடன் ஸ்ரீலங்கா படைகள் தமிழர்களின் தாயகத்தில் நிலைகொண்டிருப்பதை கண்டியுங்கள். (உ-ள)

## ஈழவர் முன்னணி ஏற்பாட்டில் நேற்று நடந்த பெரும் பேரணி

யாழ்ப்பாணம், ஜூன் 27

தமிழீழத் தாயகத்தையும், போராளிகளையும் அங்கீகரிக்கக் கோரி நேற்று ஈழவர் முன்னணி நடத்திய மாபெரும் பேரணியை இந்திய செஞ்சிலுவைச் சங்க பிரதிநிதிகள் பார்வையிட்டனர்.

பெரும் எண்ணிக்கையான மக்கள் கலந்து கொண்ட இந்தப்பேரணியின் இறுதியில் இந்திய செஞ்சிலுவைச் சங்க தலைவர் திரு. சௌத்திரியிடம் மகஜர் ஒன்றும் கையளிக்கப்பட்டது

நாச்சிமார் கோவிலடியில் ஆரம்பித்த பேரணி கே. கே. எஸ். வீதி, ஸ்ரான்லி வீதி, பிரதான வீதி வழியாக யாழ் செயலகத்தை அடைந்

(8ஆம் பக்கம் பார்க்க)

### சுபநேரம்

27-06-1987
சனிக்கிழமை
சுபநேரம்:-
02.55 முதல் 04.25வரை
ராகுகாலம்:-
08.55 முதல் 10 25 வரை
இவை பகலுக்கும் இரவுக்கும் பொருந்தும்

## கப்பல் பார்க்கச் சென்றோர் மீது சூடு!

யாழ்ப்பாணம், ஜூன் 27

ஈழத் தமிழர்களுக்கு நிவாரண உதவிப் பொருள்களை ஏற்றி வந்த கப்பல்களைப் பார்வையிடச் சென்ற பொதுமக்கள் மீது இராணுவத்தினர் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டனர்.

இதனால் ஐந்துபேர் படுகாயமடைந்தனர். எஸ். தவராசா என்பவர் ஆபத்தான நிலையில் யாழ். ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டார்.

நேற்று மாலை ஐந்து மணியளவில் இச் சம்பவம் நடைபெற்றது.

கீரிமலை தீர்த்தக்கேணி அருகில் சென்ற ஐம்பதுக்கும் அதிகமான பொதுமக்கள் மீதே ஹாபர்வியூ இராணுவத்தினர் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டனர். (உ-10)




## ராஜீவ் கவலை!

யாழ்ப்பாணம், ஜூன் 27

இலங்கைத் தமிழர்களுக்கு இழைக்கப்படும் இன்னல்கள் குறித்து இந்தியப் பிரதமர் ராஜீவ் கவலை கொண்டுள்ளார்.

— இவ்வாறு யாழ்ப்பாணம் வந்துள்ள இந்திய தூதரக முதலாவது செயலாளர் திரு. பூரி செய்தியாளர்களிடம் கூறினார்.

நான் இந்திய நிவாரணப் பொருள்களை கையளிக்கவே இந்திய அரசால் அனுப்பப்பட்டுள்ளேன்.

எனது நிலையை மீறி ஏதும் விமர்சனம் கூற விரும்பவில்லை.

— இப்படி அவர் கூறினார். (உ-ள)

## யாழ்ப்பாணத்தில் ஸ்ரீலங்கா பிரதிநிதிகள்

யாழ்ப்பாணம், ஜூன் 27

ஸ்ரீலங்கா செஞ்சிலுவைச் சங்க பிரதிநிதிகள் மூவரும் நேற்று காங்கேசன்துறையில் இருந்து யாழ்ப்பாணம் வந்து சேர்ந்தனர்.

நிவாரணப் பொருள்களை விநியோகிக்கும் வேலைகளை இந்திய, யாழ்ப்பாண செஞ்சிலுவைச் சங்க பிரதிநிதிகளுடன் இணைந்து இவர்கள் மேற்பார்வையிடுவர்.

யாழ் உணவுக் கட்டுப்பாட்டு அதிகாரி திரு. எஸ். பற்குணம் காங்கேசன்துறையில் இருந்து இவர்களை யாழ்ப்பாணம் வரை அழைத்து வந்தார். (உ-10)

## வடமராட்சியில் லயனல்

யாழ்ப்பாணம், ஜூன் 27


வடமராட்சிக்கான சிவில் நிர்வாக இணைப்பு அதிகாரி திரு. லயனல் பெர்ணண்டோ நேற்றுப் பிற்பகல் வடமராட்சி சென்றார். (உ-ள)


ஈழத் தமிழர்களுக்கு நிவாரணப் பொருள்களை ஏற்றிவந்த ''ஸ்ரீ வத்ஸவ'' கப்பல் காங்கேசன்துறையில் தரித்து நிற்பதை மேல் படத்தில் காணலாம்.

''ஸ்ரீ வத்ஸவ'' கப்பலில் வந்த மருந்துப் பொதிகளை உடனுக்குடன் லொறிகளில் ஏற்றும் வேலைகள் மிகவும் துரித கதியில் நடைபெற்றுக் கொண்டிருப்பதை இரண்டாவது படத்தில் காணலாம்.

கப்பலில் இருந்து மருந்துப் பொதிகள் இறக்கப்பட்டு லொறிகளில் ஏற்றப்படுவதை கப்பலின் மேல் தளத்தில் நின்று பூரியும் கப்டன் குப்தாவும் கம்பீரத்துடன் பார்வையிடுவதை மூன்றாவது படத்தில் காணலாம்.

(படங்கள் : ஜயப்) (உ)





## ஐலண்ட் பிறைட் திரும்புகின்றது

யாழ்ப்பாணம், ஜூன் 27

இந்திய நிவாரணப் பொருள்களுடன் வந்த முதற்கப்பலான ஐலண்ட் பிறைட் இன்று பிற்பகல் இந்தியா திரும்புகின்றது.

இக்கப்பல் மீண்டும் சில நாட்களின்பின் 750 தொன் உணவுப் பொருள்களுடன் வரும் என்று இந்திய அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (உ-ள)



## சௌத்திரியின் காலில் விழுந்து அழுத வயோதிபர்!

யாழ்ப்பாணம், ஜூன் 27

தமது காலில் விழுந்து ''எமது உயிரைக் காப்பாற்றுங்கள்'' என்று கதறியழுத தமிழ் வயோதிபரை கலங்கிய கண்களுடன் தழுவி ஆறுதல் சொன்னார் இந்திய செஞ்சிலுவைச் சங்க தலைவர் திரு. சௌத்திரி.

இச்சம்பவம் நேற்றுக் காலை இந்திய செஞ்சிலுவைச் சங்க பிரதிநிதிகள் தங்கியிருந்த ஞானம்ஸ் ஹோட்டல் வாசலில் இடம் பெற்றது.

இந்திய அரசு, தமிழீழத்தையும் போராளிகளையும் அங்கீகரிக்க வேண்டும் எனக் கோரி பொதுமக்கள் நடத்திய ஊர்வலம் ஒன்று நேற்று நல்லூரிலிருந்துஞானம்ஸ் ஹோட்டலை வந்தடைந்

(8ஆம் பக்கம் பார்க்க)

## அகதிகளுக்கு ஆறுதல் கூறிய பூரி!

யாழ்ப்பாணம், ஜூன் 27

தமிழ் அகதிகளின் நிலை விரைவில் மாறும். இதற்கான நடவடிக்கைகளை இந்தியா உடன் மேற்கொள்ளும்.

— இவ்வாறு இந்திய தூதரக முதலாவது செயலாளர் திரு. பூரி மல்லாகம் அகதி முகாமிற்குச் சென்று நிலைமையை நேரில் அவதானித்தபோது அங்குள்ள அகதிகளிடம் தெரிவித்தார்.

அகதிகள் தங்களின் அவலங்களைக் கூறி கண்ணீர் விட்டுக் கதறியழுதனர்.

அகதிகளின் கண்ணீர் கதையைக் கேட்டு கலங்கிய பூரி, தான் இந்தியத் தூதர் திரு. டிக்ஸிற்றின் கவனத்துக்குக் கொண்டு வந்து அகதிகள் நிவாரண உதவிகள் பெறுவதற்கு ஆவன செய்வதாக உறுதியளித்தார். (உ-ள)

## ஜெயவர்த்தனவின் கொடும்பாவி எரிப்பு

### மலேஷியாவில் ஆர்ப்பாட்டம்

கோலாலம்பூர், ஜூன் 27

ஈழத் தமிழர்கள் படுகொலை செய்யப்படுவதைக் கண்டித்துநேற்று மலேஷியாவின் தலைநகரான கோலாலம்பூரில் சுமார் நூறு தமிழர்கள் ஆர்ப்பாட்டம் செய்தனர்.

இலங்கைத் தூதரகத்தின் முன்னால் ஆர்ப்பாட்டம் செய்தவர்கள் ஜனாதிபதி ஜெயவர்த்தனவின் கொடும்பாவியையும் எரித்தனர்.

ஆர்ப்பாட்டத்தின் முடிவில் மலேஷியாவிலுள்ள இலங்கைத் தூதுவரிடம் மகஜர் ஒன்றும் கையளிக்கப்பட்டது.

## கருத்துக் கலசம்

மயூரா

### உதவி - சேவை

மக்கள் சேவையே மகேசன் சேவை. மற்றவர்களுக்குச் சேவை — தொண்டு — உதவி — செய்வது தெய்வ தொண்டுக்கு நிகரானது.

வசதி வாய்ப்பு உள்ளவனுக்கு உதவுவது அல்லது தொண்டு செய்வது சேவை அல்ல. அது பிரதி உபகாரம் எதிர்பார்த்துச் செய்யும் உதவியாகும். அதனைச் சரியாகச் சொல்வதானால் செல்வந்தனுக்கு அல்லது அரசியல் செல்வாக்கு உள்ளவனுக்கு கால் பிடிப்பது என்றே கூற வேண்டும்.

வசதி இல்லாதவனுக்கு, வாய்ப்புக் குறைந்தவனுக்கு உதவுவதே சேவை. சமூகத்தின் கீழ் மட்டத்தில் உள்ளவனை மேலே கொண்டு வர உதவுவதே சேவை. கல்வி அறிவில்லாதவனுக்கு அறிவூட்ட உதவுவதே சேவை. நிர்க்கதிக்கு உள்ளானவனுக்கும், அல்லலுறுபவனுக்கும், இன்னல் அடைபவனுக்கும் உதவுவதே உண்மையான சேவை — தொண்டு.

பசித்தவனுக்கு உணவு தருவது தர்மங்களில் பெருந் தர்மம். உயிருக்கு ஊசலாடிக் கொண்டிருப்பவனுக்கு உதவி — அவன் உயிரைக் காப்பாற்றுவது எல்லாவற்றையும் விட மேலானது.

உணவுக்கும் உயிருக்கும் பெரும் தொடர்பு உண்டு. மனிதனுக்கு மட்டுமன்றி ஏனைய ஜீவராசிகளுக்கும் உணவில்லையேல் உயிர் போய்விடும்.

ஆகையால் ஒருவனது பசி போக்குவது உயிர் காப்பதற்குச் சமமானது. ஒருவனது உயிரைக் காப்பது கடவுளின் அருளைப் பெற்றதற்குச் சமமானது.

பண்டைய நாட்களில் நாடுகளில், ஊர்களில் அன்னசத்திரங்கள் அதிகம் இருந்தன. ஆயிரம் ஆலயங்களைக் கட்டுவதற்குப் பதிலாக ஓர் அன்ன சத்திரம் கட்டி, பசித்தவனுக்கு உணவு போடுவது மேலானது என்று சமய சிற்திருத்தவாதிகள் கருத்துரைத்திருக்கிறார்கள். தானங்களில் சிறந்தது அன்னதானம் என்று சொல்வதும் அர்த்தம் நிறைந்ததாகும்.

தனிமனிதன் மட்டும் தான் தானம் செய்ய வேண்டும் என்பதில்லை. நாடுகளும், அரசுகளும் தானம் செய்யலாம். பண்டைக்காலத்தில் அரசர்கள் தான தர்மங்கள் செய்திருக்கிறார்கள். அதனால் அவர்களது நாடுகள் செழிப்புற்றன.

இப்போதும் நாட்டுக்கு நாடு உதவி என்ற பெயரில் தானம் செய்யப்படுகிறது. ஒரு நாட்டில் வெள்ளம் என்றும், சூறாவளி என்றும், பெரும் விபத்து என்றும் இயற்கை அனர்த்தங்கள் ஏற்படும்போது மற்றைய நாடுகள் பணம் என்றும் பொருள் என்றும் உதவுவது உண்டு.

ஒரு நாட்டு மக்கள் பட்டினியால் வாடும் போதும், ஏனைய நாடுகள் அந்த மக்களுக்கு உணவு அளித்து உதவுகின்றன. அந்த உதவி மனிதாபிமான உதவி

(8 ஆம் பக்கம் பார்க்க)

புதுமையும் எழிலும் பல்சுவை வார இதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

★★★★★★★★★★
சின்னஞ் சிறு
விளம்பரம்
★★★★★★★★★★

**சேவை**

சேலைகள் அச்சிடுதல், தையல் வேலைகள் புதிய பழைய கிளை ஸ்தாபனங்கள் விளம்பரப் படுத்தும் அறிவித்தல்களை எழுதவும் பழைய சேலைகளுக்குப் புதுப்பொலிவுடன் தேவையான டிசைன்களில் அச்சிடுவதற்கும் நவீன தையல் வேலைகளைச் செய்யவும், கோவில் திரைச்சீலை விளம்பரச் சீலைகளைத் தேவையான விதத்தில் எழுதவும், பாதுகாப்பான சூழலில் அமைந்த இடம்.

வசந்தா ரெக்ஸ்ரைல்ஸ் 42, கல்லூரி வீதி, நீராவியடி, யாழ்ப்பாணம்.
(1434)


## சித்த மருத்துவ விரிவுரைகள்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக சித்த மருத்துவத்துறை மாணவர்களுக்கான விரிவுரைகள் மீண்டும் இம்மாதம் 29 ஆம் திகதி ஆரம்பமாகும். (இ)

# குடாநாட்டில் இந்தியக் கப்பல் முகாம்:

# ஈழத் தமிழருக்கு வயிற்றுக்கு உணவு; கொழும்பு அரசுக்கு மூளைக்கு வேலை!

கப்பல் இராஜதந்திரம் ஆரம்பமாகி விட்டது.

கச்சதீவுடன் தடுத்தவர்கள் காங்கேசன் துறை வரை அழைத்து வந்து விட்டார்கள்.

விரும்பி அழைத்து வந்தார்களா? விரும்பாமல் அழைத்து வந்தார்களா?

'விமானம்' மூலம் வழங்கிய 'செய்தி' தான் பதில் சொல்ல வேண்டும்.

விமானம் வந்து போனது பற்றி கொழும்பில் கூப்பாடு போட்டவர்கள், கப்பலில் வந்த சாப்பாட்டுப் பொருள்களை இறக்கும் வேலைகளை மேற்பார்வை செய்ய அரசுக் குழு ஒன்றை அனுப்பி வைத்துள்ளனர்.

இப்படி இன்னும் எத்தனை கப்பல்கள் வரும்? கொழும்பு தீவிரமாகச் சிந்திக்கத் தொடங்கி விட்டது.

முதல் கப்பல் வந்த கையோடு இந்தியத் தூதர் டிக்ஸிற், வெளியுறவு அமைச்சர் சாகுல் ஹமீதை வியாழன் மாலையே சந்தித்தார்.

மேலும் பல கப்பல்களில் நிவாரணப் பொருள்களை இந்தியா அனுப்பப் போவது குறித்தே திரு. டிக்ஸிற் அமைச்சருடன் பேசினார்.

பேச்சின் பலன் என்ன என்று தெரியவில்லை.

ஆனால் திரு. டிக்ஸிற்றே, முதல் கப்பல் வந்த சூட்டோடு, முதலில் கிடைத்த விமானத்தில் புதுடில்லி பறந்து விட்டார்.

அவசர ஆலோசனைகளை நடத்த அவரை புதுடில்லி அவசரமாக அழைத்து உள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

முதல் கப்பலுடன் ஏற்பட்ட அவசரம் என்ன?

கப்பல் ராஜதந்திரம் ஆரம்பமாகி விட்டது என்பதுதான் அர்த்தமா?

கப்பல் ராஜதந்திரம் எவ்வளவு காலத்துக்கு நீடிக்கும்?

இனப்பிரச்சினைக்கு தீர்வு காணும் வரை நீடிக்குமா?

### பத்தாயிரம் தொன் உணவுப்பொருள்?

கிடைக்கும் செய்திகளைப் பார்த்தால் பத்தாயிரம் முதல் இருபதினாயிரம் மெட்ரிக் தொன் உணவுப் பொருள்கள் வரை யாழ்ப்பாணத்

**உள்ளும் புறமும்**

குருமணி

துக்கு அனுப்பி வைக்கும் திட்டம் இந்தியாவுக்கு உண்டு என்று தெரிகின்றது.

இவ்வளவு உணவுப் பொருள்கள் அனுப்பி வைக்கப்படுமா?

இப்படிக் கொழும்புச் செய்தியாளர் ஒருவர் வெளியுறவு அமைச்சர் சாகுல் ஹமீதுவைக் கேட்டார்.

'முதல் கப்பல் வரட்டும். அதுவரை பொறுத்திருப்போம்'— இது அமைச்சரின் பதில்.

இந்த நிலையில் கப்பல் ராஜதந்திரம் எதைக் கூறுகின்றது?

### புதுவித தலையீடா?

கப்பல் ராஜதந்திரம் புதுவிதமான தலையீடு என்று கொழும்பு அரசியல் வட்டாரங்கள் அபிப்பிராயப்படுகின்றன.

சாம, பேதம் முடிந்து 'தானத்தில்' இறங்கியிருப்பதாக இந்தியா காட்டுகின்றது என்று சில அரசியல் அவதானிகள் கருதுகின்றனர்.

வேண்டாம், வேண்டாம் என்று சொல்ல உணவுப் பொருள்களை 'தானமாக' தருகின்றேன் என்று இந்தியா கூறுவது இதனைப் புலப்படுத்தவில்லையா? என்று கொழும்பு அரசுப் பிரமுகர்கள் சிலர் கேட்கின்றனர்.

'தானத்தை' வாங்காவிட்டால்......... இப்படியோசித்துத்தான் கொழும்பில் உள்ளவர்கள் 'பிடி' கொடுத்துவிட்டனர் என்று கருதுவோரும் உள்ளனர்.

'பிடி' கொடுத்துவிட்டாலும் பிரச்சினை; பிடி கொடுத்தாலும் பிரச்சினை என்றால் என்ன செய்வது?.............

இந்த அழாக்குறையான நிலையில் தான் கொழும்பு அரசு இயங்கிக் கொண்டிருக்கின்றது.

கொழும்பு அரசைப் பொறுத்தமட்டில் 'கப்பல் ராஜதந்திரம்' 'கப்பல் உபத்திரவம்' ஆகத்தான் இருக்கப்போகின்றது.

'உங்கள்நாட்டில்தான் பட்டினி' என்று கூறிக் கொண்டு தானத்தை ஏற்கவேண்டிய நிலைக்கு கொழும்பு தள்ளப்பட்டு விட்டது.

''பிரச்சினைக்கு விரைவில் தீர்வு காணவேண்டும். அதுவும் அரசியல் தீர்வு காணவேண்டும்''- என்ற நிலையை இதன் மூலம் கொழும்புக்கு ஏற்படுத்தியாயிற்று.

இந்தியாவின் உணவுப் பொருள்கள் யாழ்ப்பாணத்தில் வயிற்றுக்கு உணவாகவும் கொழும்பு அரசின் சிந்தனைக்கு உணவாகவும் (மூளைக்கு வேலையாகவும்) பயன்படுமா?

கொழும்பு அரசின் சிந்தனைக்கு உணவாகப் பயன்படுவதில்தான் கப்பல் ராஜதந்திரத்தின் வெற்றி தங்கியுள்ளது. இல்லையேல்...... 'கப்பல் ஒரு தொடர் கதையாக மாறிவிடும்.

## கப்பலும், தேர்தலும்!

கப்பலும் வருகுது தேர்தலும் வருகுது — இது புதிய சித்தர் பாடல் அல்ல!

கப்பல் வருகின்றது என்றவுடன் தர்மிஷ்டர் விடுத்த அரசு ஆணை இது.

கப்பல் ராஜதந்திரத்தை முறியடிக்க தர்மிஷ்டர் விடுத்த ஆணையாக சில வட்டாரங்கள் இதைக் கருதுகின்றன.

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் இடைத்தேர்தல் என்பது தர்மிஷ்டர் வழமையாகப் பாடும் பல்லவி தான். இம்முறை பல்லவிக்கு அரசு முத்திரை குத்தப்பட்டு 'அனுபல்லவி' ஆக்கப்பட்டுள்ளது.

வழமை போல் 'சரணத்தில்' முடியுமா? என்பது அவசரமாக புதுடில்லி சென்ற திரு. டிக்ஸிற் கொழும்புதிரும்பியதன் பின்னர் தான் தெரியவரும்.

# கப்பல் வந்தது, கப்பல் வந்தது காங்கேசன்துறைக்கு; உப்பி வாடிய தமிழர் இதயம் மலர்ந்து மகிழ்ந்தது

25ஆம் திகதி வியாழக்கிழமை காலை ஐந்து மணி. இந்தியக் கப்பலின் வருகையை எதிர்பார்த்து காங்கேசன்துறை செல்வதற்காக பத்திரிகை நிருபர்கள் செஞ்சிலுவைச் சங்கபிரதிநிதிகள், சென் ஜோன்ஸ் அம்புலன்ஸ் படையினர் யாழ் செயலகம் முன் காத்துநின்றனர்.

யாழ். அரச அதிபர் குழு வந்து தம்முடன் அழைத்துச் செல்வர் என்ற எதிர்பார்ப்புடன் காத்துநின்ற எமக்கு ஏமாற்றம்தான் கிடைத்தது.

காங்கேசன் துறை முகத்துக்குச் செல்வது என்றால் சுலபமான காரியமா?

காலை ஐந்து மணியிலிருந்து எட்டு மணிவரை யாழ் செயலகம் முன்னால் பத்திரிகையாளர்கள், செஞ்சிலுவைச் சங்க பிரதிநிதிகள், சென் ஜோன்ஸ் அம்புலன்ஸ் படையினர், பலதரப்பட்ட கருத்துக்களை வெளியிட்டதால் நேரம் போனதே தெரியவில்லை.

''என்னடாப்பா ஆமி பிடித்தால் என்ன? சுட்டால் என்ன? இதுவும் ஒரு வீரமரணம்தானே அண்ணை. அப்படி ஏதும் நடந்தது என்றால் நாளைக்கு 'லீட்' பண்ணிப் போடுங்கோ.''

ஒரு பத்திரிகையாளர் இப்படி ஜோக் அடித்தார்.

### புறப்பாடு

காலை எட்டு மணிக்கு எம்மையும், செஞ்சிலுவைச்சங்க பிரதிநிதிகளையும், சென் ஜோன்ஸ் அம்புலன்ஸ் படையினரையும் செயலக ஊழியர்கள் சிலரையும் சுமந்து கொண்டு பஸ்வண்டி சேந்தாங்குளம் நோக்கி புறப்படுகிறது.

பஸ்ஸின் இருமருங்கிலும் செஞ்சிலுவைச் சங்க கொடிகள் பறக்க விடுதலைப்புலிகளின் வாகனம் எமது வாகனத்துக்கு முன்னே சென்று கொண்டிருந்தது.

9.30மணியளவில் எமது பஸ் சேந்தாங்குளம் பகுதியைச் சென்றடைந்தது. சேந்தாங்குளப் பகுதியில் மனித வர்க்கத்தையே காணவில்லை. நாம் மட்டும் தனித்து நின்றோம்.

உள்ளூரப் பயந்தான். என்றாலும் அருகேஇருந்த போராளி ஒருவரிடம் எம்-16 இருந்ததன் காரணமாக பயத்தை மறந்து கடற்கரைப் பகுதியை நோக்கி நான் நடக்கிறேன்.

வெகு தூரத்தே செந்நிறத்திலான பெரிய கப்பல். ''ஓம்! மச்சான் வருகுதுபோல இருக்குது. அது கப்பல் இல்லையடா ரோலர். இல்லை மச்சான் கப்பல்தான்.'' கப்பலில் இரண்டுபக்கத்திலும் ஸ்ரீலங்கா போர்க்கப்பல்கள் நீரைக் கிழித்துகொண்டு

## பட்டினியால் வாடிய மக்கள் பசிமறந்து குதூகலம் அடைந்தனர்

கடற்கரைப்பகுதிக்கு வருவதும்பின்னர் திரும்பி ஓடுவதும் இப்படித்தான் பாதுகாப்பு வழங்கியது.

நேரம் போகப்போக கப்பல்கரையை நெருங்கிக்கொண்டிருந்தது. சனநடமாட்டம் இன்றிக் கிடந்த கடற்கரை சற்று நேரத்தில் சனத்தால் நிரம்பிவழிந்தது. கப்பல் கரையை அண்டி வருவதைக்கண்ட — மக்கள் கண்களில் நீர்மல்க 'இந்தியா வாழ்க!' என கோஷம் எழுப்பினர்.

தாம் கைகளில் ஏந்தி வந்த சுலோக அட்டைகளையும் கடற்கரையில் ஊன்றிவிட்டு இந்திய அதிகாரிகளையும், செஞ்சிலுவைச் சங்கப் பிரதிநிதிகளையும் வரவேற்பதற்காகக்குழுமி நிற்கின்றனர்.

எமக்குள் ஒரு யோசனை தோன்றியது. ஸ்ரீலங்கா அரசு இந்தியப் பிரதிநிதிகளை வெளியில் விடுவார்களோ? அல்லது தமது கட்டுப்பாட்டுக்குள் இருக்கும் பகுதிகளை மட்டும் அவர்களுக்குக் காட்டிவிட்டு அப்படியே திருப்பி விடுவார்களோ என்ற சந்தேகமும் எழுந்தது.

இது ஈழத்தமிழர் வரலாற்றில் மற்றுமொரு சரித்திர நிகழ்வு.

ஆயிரத்துக்கும் மேற்பட்ட மக்கள் அங்கு குழுமிநின்று மகிழ்ச்சி ஆரவாரம் செய்தனர்.

### கப்பல் வருகை

நேரம் 10.15. இந்தியக் கப்பல் இலங்கைத் துறையை அடைகிறது.

பட்டினியால் வாடிய மக்கள் பசி மறந்து குதூகலம் அடைந்தார்கள்.

இந்திய அதிகாரிகளை வரவேற்க மக்கள் கடல் திரண்டது.


எமது மக்களுக்கு உதவ வந்திருக்கும் இந்தியக் கப்பல் காங்கேசன் துறைத்துறைமுகம்கட்டி யணைத்துக் கொள்கிறது.

தூரத்தே நின்றுபார்த்த எமக்கு கிட்டப்போகும் சந்தர்ப்பம் கிடைக்குமா? கப்பலில் ஏறும் சந்தர்ப்பம் கிடைக்குமா?

இந்திய அதிகாரிகளுடன் பேசமுடியுமா?

இப்படி எல்லாம் மனதுக்குள் கேள்விக்கணைகள் எழுந்தபடி கடற்கரையோரத்து பனைமரத்தில் சாய்ந்திருந்து சிந்திக்கின்றேன்.

அப்பொழுதுதான் அதிவேகமாக வந்த இசுசு வான் ஒன்று சடின் பிறேக்போட்டு நிற்கிறது.



நிவாரண உதவிப் பொருள்களுடன் இந்தியக் கப்பல்கள் வியாழக்கிழமை காங்கேசன் துறைமுகத்துக்கு வந்து சேர்ந்தன.

இதையொட்டி காங்கேசனுக்கு வந்த இந்தியத் தூதரகத்தின் முதலாவது செயலாளர் திரு. பூரி, கப்டன் குப்தா ஆகியோரை துறைமுகத்திலிருந்து யாழ் நகருக்கு மினிபஸ்ஸில் பொதுமக்கள் அழைத்து வந்தபோது எடுக்கப்பட்ட படம்.

அதிலிருந்து அரசஅதிபர் உட்படசெயலக அதிகாரிகள் சிலரும் இறங்குகின்றனர். விழுந்தடித்து ஓடிச்சென்ற நான் செயலக அதிகாரி ஒருவரிடம் 'ஐயா என்னமாதிரி. எல்லாம் வந்து விட்டதா?' எனக்கேட்டேன்.

'சேந்தாங்குளம் பகுதியால் போகமுடியாதாம். மாவிட்டபுரம்பகுதியால் தான் போகட்டுமாம். நீங்கள் எல்லோரும் தெல்லிப்பளைக்கு வாருங்கள்'—என்பது பதில்.

ஐயா அப்ப பிறஸ்?

''பிறஸ் என்றால் எரிந்து விழுகிறான்கள். அது பெரிய பிரச்சினையாய் இருக்கும். போய்த்தான் பார்க்கவேணும் நீங்கள் எல்லாம் முதல் அங்கை வாருங்கோ'

அவசரஅவசரமாக இவையனைத்தையும் தெரிவித்த அதிகாரிமீண்டும் அதே வானில் ஏறிப் பறக்கத் தொடங்கினர். நாமும் எமது வாகனத்தில் ஏறி அவர்களைப் பின் தொடர்ந்தோம். நாம் போன வழி தற்பொழுது திரும்பி வரும்போது மாலைகளாலும் தோரணங்களாலும் அலங்கரிக்கப்பட்டிருந்தது.

வீட்டு முற்றங்களில் நிறைகுடங்களும் வைக்கப்பட்டிருந்தன.

ஐயோ பாவம்! மக்கள் எவ்வளவு கரிசனையுடன் [illegible] ந்தவர்கள் ஏமாறப் போகிறார்கள். இருந்தாலும் தெல்லிப்பளைக்கு வருமாறு கூறியபடி நான் வாகனத்தின் முன் பகுதியில் இருந்தேன்.

கொழுத்தும் வெய்யிலையும்பொருட்படுத்தாத பாடசாலை மாணவர்கள் வீதி எங்கும் நிறைந்து காணப்பட்டனர்.

குறிப்பிட்ட இடத்தை பஸ் சென்றடைந்து பத்திரிகையாளர்களையும், சென்ஜோன்ஸ் படைப்பிரிவினரையும் இறக்கிவிட்டு காங்கேசன்துறை நோக்கி அரச அதிகாரிகள் செஞ்சிலுவைச் சங்கத்தினருடன் தொடர்ந்து போனது.

## ஈழத்தமிழர் வரலாற்றில் மற்றொரு சரித்திர நிகழ்ச்சி

'என்ன மச்சான் இது தெல்லிப்பளைச்சந்தியா?' என அருகில் இருந்த சக பத்திரிகையாளன் கேட்டபொழுது நானும் திடுக்கிட்டுப் போனேன்.

அவ்வளவு தூரம் அங்கு இடிபாடுகள் [illegible]ணப்பட்டன.

தெல்லிப்பளை யூனியன் கல்லூரி கால் முறிந்த கதிரை போல் ஒருபக்கம் விழுந்து நொருங்கிக் காணப்பட்டன. கடைகள், எரிபொருள் நிலையங்கள், வீடுகள் அனைத்தும் உடைக்கப்பட்டிருந்தன.

தெல்லிப்பளையிலும் மக்கள் நிறையத் தொடங்கி விட்டனர். மரங்களிலும், கூரைகளிலும், மேல்மாடிகளிலும் பொதுமக்கள் இந்திய அதிகாரிகளைப் பார்ப்பதற்கு இடம் பிடித்துக் கொண்டனர்.

போராளிகளும் ஆயுதங்களுடன் இந்திய அதிகாரிகளைவரவேற்பதற்கு ஆயத்தமாக நின்றனர்.

நேரம் மூன்றுமணி இருக்கும். வீதியால் மக்கள் ஓடிக்கொண்டிருந்தனர்.

பூரி வரப் போகிறார். சாப்பாட்டுப் பொருள்கள் வரப் போகின்றன என்று குரல் எழுப்பிய [illegible] தொடர்ந்து ஓடினர்.

[illegible] எனது கமராவைச் சரிப்படுத்திக் கொண்டேன். அப்பொழுது சி. ரி. பி. பஸ் வேகமாக வந்து கொண்டிருந்தது.

எமக்கு அருகில் பஸ் நிறுத்தப்பட்டதும் 'பிறஸ் ஆக்கள் ஏறுங்கோ' பஸ்ஸில் வந்த செயலக அதிகாரி ஒருவர் சொன்னார்.

சந்தோஷம் ஒருபுறம். இதயத்துடிப்பு மறுபுறம் ஏறிக்கொண்டோம்.

அனைத்தும் வெறிச்சோடிய பகுதிகள் ஊடாக பஸ் சென்றுகொண்டிருந்தது.

மாவிட்டபுரம் கந்தசாமிகோயில் அருகில் இருந்த வீடுகள் ஒன்றையும் காணவில்லை.

எங்கும் முள்ளுக்கம்பிச் சுருள்கள் மட்டுமே காணப்பட்டன.

இராணுவத்தினர் அங்கு நிலை கொண்டிருந்தனர். நீண்டகாலத்துக்குப் பின்னர் இராணுவத்தைக் கண்டதில் உள்ளூரப் பயமும் ஏற்பட்டது.

அனைத்தையும் தாண்டி காங்கேசன்துறை பட்டினசபை அருகே பஸ் நிறுத்தப்பட்டது.

பத்திரிகையாளர்களின் அடையாள அட்டைகள் அனைத்தையும் சோதனையிட்ட இராணுவத்தினர் தம்முடன் அடையாள அட்டைகளை வைத்துக் கொண்டனர்.

சரியாக நான்கு மணி. காங்கேசன்துறை துறைமுகத்துக்குள் நுழைய அனுமதி வழங்கப்பட்டது.

துறைமுகத்தினுள் இறங்கிய எம்மை யாழ்ப்பாண செஞ்சிலுவைச் சங்கப் பிரதிநிதிகள் இந்தியக் கப்பலுக்கு அழைத்துச் சென்றனர்.

கப்பலின் மேல் தளத்துக்குச் சென்ற எம்மை செஞ்சிலுவைச் சங்க பிரதிநிதிகள், இந்தியப் பிரதிநிதிகள் வரவேற்றனர்.

கப்பலில் மருந்துப் பொதிகள் மட்டுமே வந்திருந்தன.

கிரேன் மூலம் பொதிகள் இறக்கும் வேலைகள் துரிதமாக நடைபெற்றுக் கொண்டிருந்தன.

சுமார் ஒன்றரை மணி நேரம் கப்பலில் நின்ற எம்மை சந்தித்த இந்திய மாலுமிகள் ''உங்களைக் கண்டதுமே யாழ்ப்பாணத்து மக்களைக் கண்ட மாதிரி. எமது உதவி எப்போதும் கிடைக்கும்''-என்றனர்.

மலர்ந்த முகத்துடன் அவர்கள் துடிப்புடன் தமது கடமைகளில் ஈடுபட்டனர்.

மீண்டும் 5.15 மணி அளவில் இந்திய செஞ்சிலுவைச் சங்கப் பிரதிநிதிகள், இந்திய உயரதிகாரிகள் ஆகியோரை அழைத்துக்கொண்டு யாழ்ப்பாணம் நோக்கி எமது வாகனம் புறப்பட்டது.

மாவிட்டபுரம் வரை இராணுவப் பாதுகாப்பு வழங்கிய சிப்பாய்கள் மாவிட்டபுரத்தில் சகலரையும் வழியனுப்பி வைத்தனர்.

தெல்லிப்பளைப் பகுதியில் விடுதலைப் புலிகளால் வரவேற்கப்பட்ட பூரியும் இந்திய உயர் அதிகாரிகளும் செஞ்சிலுவைச்சங்கப் பிரதிநிதிகளும் யாழ்ப்பாணம் வரை மக்களால் வரவேற்கப்பட்டனர்.

பகல் எல்லாம் பூரியைக் காணும் பூரிப்பில் இருந்த மக்கள் உண்மையிலேயே பூரியைக் கண்டு குதூகலமாகக் குரல் கொடுத்தனர்.

பெண்கள் முதல் குழந்தைகள் வரை பெருந்தொகையான மக்கள் தமது மகிழ்ச்சி ஆரவாரத்தைத் தெரிவித்தனர்.

கழுத்து நிறைய மாலை அணியப்பட்ட பூரி மக்களின் கதறல்களைக் கண்டு கண் கலங்கினார்.

வாகனத்தின் முன்னே சிறுவர்களது தாங்கிய சுலோகங்களை பூரி தம்முடன் எடுத்துக் கொண்டார்.

இதுபோன்ற என்றும் இல்லாத மகத்தான வரவேற்பை நான் இன்று வரை காணவில்லை.

ஆறு மணியுடன் அடங்கி விடும் கிராமம் எல்லாம் 9 மணிவரை விழித்திருந்தது.

திரு. பூரியின் யாழ் வருகை மக்களின் கண்ணீர் துடைக்குமா? ★

கே. இரத்தினராஜசிங்கம்

## இந்திய அதிகாரிகளை வரவேற்கத் திரண்டது சனக்கடல்

## இமயத்து நிமிர்வே வருக!

இந்தியமே! எழுந்தாய்.
இமயத்துச் சிங்கம் துயில்விட்டு
எழுந்ததென எழுந்தாய்
எம் உள்ளத்தில் இன்று
இமயத்தின் நிமிர்வு.
குருதிப் பெருக்குட் குமைந்து கிடந்தநாம்
கொலைக்களத்தே குற்றுயிராய்த் துடித்த நாம்
கூனிப் போயிற்றுன் மனச்சாட்சி
என்றிருந்தோம்
இன்றோ
கூனிய வில்லொடித்த கோதண்ட ராமனென
நிமிர்ந்ததுன் மனச்சாட்சி! வணங்குகிறோம்.
கடல் தாண்டிவந்த ராமதூதர்
செய்திகள் தந்துசென்றார்
அசோகவனத்தரக்கர் குழாம்
அலறிப் புடைத்து ஆர்ப்பரித்தது
என்னும் இன்றோ
இராமரணை சார்ந்து வருகின்றன
தர்மக்கொடியிழுத்த கப்பல்கள்.
தர்மச் சக்கரத்தை தருணத்தில் சுழலவைத்த
இந்திய ஆத்ம எழுச்சியை வணங்குகிறோம்
உயிர்த்தண்ணீர் வார்க்க நீளுகின்ற கரங்களை
உரிமையுடன் முத்திக்கின்றோம்.
வருக! சகோதரத்துவமே! உனைவாழ்த்துகிறோம்
வருக! தோழமையே உனக்குத்
தோள்கொட்டுகிறோம்
இன்னும் அழியாத இராமரணைமீது
மீண்டும் தர்மத்தின் சுவடுகள்; வாழிய!

சு. வி.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

சோசலிச நாடுகள் வறுமையை எதிர்த்து வெற்றி கண்டுள்ளன.

செல்வந்தர்கள் தமது செல்வத்தை மற்றவர்களிடத்து அழுக்காறு ஏற்படுமாறு ஆடம்பரமாகச் செலவிடுகிறார்கள்.

பொருளாதார, ஆன்மீக முன்னேற்றம் ஒரு சேர நடைபெற்றால் குறையில்லாத சமுதாயம் தோன்றும்.

இனி இந்தியாவைத் தாங்கக்கூடிய இளைஞர்கள் தேவை. — குன்றக்குடி அடிகள் —

# வறுமையை வேரறுத்த சோசலிசம்; மக்கள் சேவைதான் சமயவாழ்வு

பொதுவாக சோஷலிச நாடுகள் வறுமையைஎதிர்த்து வெற்றி பெற்றன என்பது உலகறிந்த உண்மை. அதனால் சோவியத் யூனியனுக்கும் சீனாவிற்கும் சென்று வந்தேன். அந்த நாடுகள் எப்படி வறுமையை எதிர்த்து போராடி வெற்றி பெற்றன என்பதை அறிவதே எனது நோக்கமாக இருந்தது.

சோஷலிசத்தைத் தனது கொள்கையாகக் கொள்ளாத ஆனால் வறுமையை நொறுக்கிய பெருமை, சாதனை ஜப்பானுக்கு உண்டு. அதன் காரணமாக ஜப்பானுக்கும் சென்றிருந்தேன். இந்த நாடுகளின் படிப்பினையை எம் நாட்டுக் கிராமங்கள் பெற்றுக் கொள்ளவேண்டும். குறிப்பாக இளைஞர்கள் பெற்றுக் கொள்ள வேண்டும் என்பது எனது ஆசை.

### ஜப்பானிய இளைஞரின் சபதம்

ஜப்பானில் இருக்கும் எந்தவொரு இளைஞனைப் பார்த்தாலும், அமெரிக்கா ஜப்பான் மேல் போட்ட அணு குண்டுக்காக அமெரிக்கா மேல் ஆத்திரப்படாமல், அதை வெளிக்காட்டாமல் தமது தொழிற்திறனில் அதைக் காட்டுவதை நான் உணர்ந்தேன். அமெரிக்காவை நாம் உலகச்சந்தையிலிருந்து அகற்றுவோம் என்பது அந்நாட்டு இளைஞர்களின் சபதமாக இருக்கிறது.

அதேபோல எமது இளைஞர்களும், நாமும் தன்னிறைவுள்ள, எந்த நாட்டிடமும் கை ஏந்தாத நாட்டைப் படைப்போம் என்று நினைத்து செயற்பட்டால் எமது நாடு நிச்சயமாக முன்னேறும் என்பதில் எனக்கு இரண்டு வித கருத்து இல்லை. அந்தப் பார்வையில் வெளிநாடுகளான சோஷலிச நாடுகளுக்குச் சென்று வந்தேன்.

சோவியத் நாட்டில் பெரும்பான்மையான தொழில்கள் கூட்டுறவு முறையில் நடைபெறுகிறது. தொழிலாளிக்கு நல்ல ஊதியம் கிடைக்கிறது. ''இது நமது சொத்து'' என்ற மனப்பாங்கு இருக்கிறது. அத்தகைய மனப்பாங்கை நம் நாட்டிலும் உருவாக்க வேண்டும்.

### ஒருமைப்பாட்டு உணர்வு அவசியம்

அண்மைக் காலமாக நமது நாட்டில் நல்லோர் இல்லாத காரணமாக நாட்டுக்கும் நாட்டு மக்களுக்கும் அரசுக்குமிடையே கூட இடைவெளி ஏற்பட்டுக் கொண்டு வருகிறது. இந்த இடைவெளியை தடுத்து நிறுத்தி மிக ஆழமான இந்திய ஒருமைப்பாட்டு உணர்வை உருவாக்கி நாம் எல்லோரும் இந்தியர். நமது நாடு இந்திய நாடு. என்ற நிலையில் நின்று இந்தியாவையும் ரஷ்யா, சீனா நாடுகளைப்போல் முன்னேற்ற வேண்டும்.

உதாரணத்திற்கு ஒன்றை எடுத்துக்கொள்ளுங்களேன். நமது நாட்டில் சிலர் இருக்கிறார்கள். அவர்களுக்கு செல்வம் இருக்கலாம். ஆனால் அந்த செல்வத்தை மற்றவர்களிடத்தில் அழுக்காறு தோன்றுகின்ற வண்ணம் மிக ஆடம்பரமாகச் செலவழிக்கிறார்கள். ஒரு புறம் இன்ப வாழ்க்கை. மறுபுறம் துன்ப வாழ்க்கை. ரஷ்யா, சீனா போன்ற நாடுகளில் இத்தகைய வாழ்க்கை முறை இல்லை என்பதை நாம் எண்ணிப் பார்க்கவேண்டும். சீனாவிலே தனி மனிதர்கள் கார் வைத்துக் கொள்ளத்தடை. எமக்குச் சயிக்கிள் கிடைக்கிறவரையில் கார் இல்லை என்று சொல்கிறார்கள்.

கேக் என்பது ஒரு சாதாரண தின்பண்டம். அந்த தின்பண்டத்தைக் கூட ரஷ்யாவின் புரட்சித் தலைவர் லெனின், எல்லோருக்கும் ரொட்டி கிடைக்கிறவரையில் கேக் இல்லை என்று சொன்னாராம். நமது நாட்டிலும் மிக ஆடம்பரமான வாழ்க்கையை, மிக உயர்ந்த வாழ்க்கையை வாழ்வோர் தங்களுக்குள்ளேயே ஒரு கட்டுப்பாட்டைவளர்க்க வேண்டும்.

தங்களுக்குப் பின்னணியில் தேங்கி நிற்கின்ற சமுதாயத்தை அழைத்துப் போகின்ற மனப்போக்கு செல்வம் உடையவர்களுக்கு வந்து விட்டால் நாடு எங்கேயோ சென்று விடும். இந்த நோக்கத்தில் தான் சைவத்திருமுறை பாடிய அப்பரடிகளும்

''இரப்பவர்க்கு ஈய
வைத்தாய்
ஈபவர்க்கு அருளும்
வைத்தாய்'.

என்று சொன்னார். இது தான் அன்று காந்தியடிகள் சொன்ன அறநெறிக்

**தொகுப்பு: வி. செல்வக்குமரன்**

கொள்கை. தர்மார்த்தக் கொள்கை. நம்முடைய நாட்டு செல்வந்தர்களுக்கு இந்த நல்ல மனப்பாங்கு வேண்டுமென்பது எனது ஆசை. எனவே அந்த சோஷலிச நாடுகளின் செயல்முறை எனது குன்றக்குடித் திட்டங்களுக்குப் பின்னணியாக இருந்தது என்பதை மகிழ்ச்சியோடு சொல்கிறேன்.

### சமய வாழ்வு

சமய வாழ்க்கை என்பது அவனை நம்புவது. அவனை எண்ணுவது. ''வைத்த பொருள் நமக்காம்'' என்று சொல்லி நம்புவது அது. ஒரு நொடிப் பொழுதில்கூட அவனை எண்ணி விடலாமே. வெறும் சடங்குகள் ஆராதனைகள் ஆரவாரங்களை நீங்கள் சமயம் என்று கருதுகிறீர்களா? திருமூலர் அன்றே சொல்லி இருக்கிறார்.

''நடமாடும் கோயில் நம்பர்க்கொன்று ஈகில்
படமாடும் கோயில் பரமர்க்கும் ஆங்கு அது ஆகும்'' என்று,

ஆகவே வாழப்பிறந்த மனிதர்க்கு எல்லா வசதிகளும் செய்து கொடுப்பதே இறைவழிபாட்டை நிகர்த்தது.— என்பது தான் நமது நாட்டு சமயக் கொள்கை, கோட்பாடு.

சிலர் பசு புண்ணியம் பதி புண்ணியம் என்று போற்றுகிறார்கள். தத்துவ சாஸ்திரங்கள் பேசுகிறார்கள். நான் ஏழைக்கு உதவுகிறேன் என்று சொன்னால் அது பயன் அற்றது.

நான் கடவுளின் அருள் பெறுவதற்குரிய பாத்திரமாக இருக்கின்ற இந்த உயர் மானுடத்திற்குச் சேவை செய்கிறேன் என்ற நினைவிருந்தால் அதுவே கடவுள் வழிபாடு என்பது தான் எனது நம்பிக்கை, கருத்து. நான் கூட சில வேளைகளில் பள்ளிப் பிள்ளைகளுக்குக் கதை சொல்லும் போது இக் கருத்தையே வலியுறுத்திச் செல்லுவேன்.

### பொருளாதார ஆன்மீக முன்னேற்றம்

இத்துறையில் தொடர்பாகக் கிராமங்கள் முன்னேறுமானால் அவர்கள் பொருளாதார முன்னேற்றம் மட்டும் அடைவதில்லை. ஆன்மீக முன்னேற்றமும் அடைவார்கள். இவ்விரு முன்னேற்றங்களும் ஒரு சேர நடைபெற்றால் தான் குறைகள் இல்லாத சமுதாயத்தைக் காணமுடியும்.

நமது கிராம இளைஞர்கள் தங்கள்கல்வி முடிந்தபின் தைரியமாக சமூக வாழ்வில் ஈடுபடவேண்டும். கல்வி என்பது மனிதனது ஆக்கத் திறனை உருவாக்கவேண்டும். ஒருவனுக்குத் தகவல்கள், செய்திகள் தெரிந்து கொள்வது மட்டுமே கல்வியாகாது.

அவன் ஒரு படைப்பாளியாகத் தன்னைத் தகவமைத்து தனக்கும் தனது சமூகத்திற்கும் வாழ்வளிக்கக் கூடிய ஆற்றல் மிக்க இளைஞர்களாக கல்லூரிகளில் இருந்து வெளிவரவேண்டும். முப்பது முப்பத்தொரு ஆண்டுகள் நாட்டின் விடுதலை கிடைத்த பின்பு வரலாறு ஓடிக்கொண்டே இருக்கிறது. நான் நினைக்கிறேன் இந்தியா இவர்களைத் தாங்கி ஏற்றுக் களைத்து நிற்கிறது. இனி இந்தியாவை தாங்கக் கூடிய இளைஞர்கள் தேவை. பள்ளிகள், கல்லூரிகளில் இருந்து வெளிவரும் இளைஞர்கள் இந்தியாவை எதிர்பாராமல் அரசை எதிர்பாராமல் வளர்ந்து இந்தியாவை நான் தாங்குவேன் எனச் சூளுரைப்பவர்களாக வந்தால் புதிய வரலாறு தோன்றும். அதுதான் எனது விருப்பம். நாட்டுக்கும் அது நல்லது.

(தவத்திரு குன்றக்குடி அடிகளார் வானொலியில் ஆற்றிய உரை இது.) ★

# அறுபது காணும் மல்லிகை ஜீவா

கீழைத்தேச ஆண்டுக் கணக்கில் அறுபது வருடங்களே அமைந்துள்ளன. ஒவ்வொரு ஆண்டுக்கும் பெயரும் கொடுக்கப்பட்டுள்ளது. இவ்வழக்கு இந்தியா, சீனா, யப்பான் போன்ற இடங்களிலெல்லாம் வழக்கிலேயுள்ளது. இவ் வறுபதாண்டுக் காலச் சக்கரத்தில் ஒருவர் தான் பிறந்த ஆண்டினைத் தன்னுடைய வாழ்நாளில் அறுபதாவது வயதிலே எதிர்கொள்வார்.

அவரைப் பொறுத்த வரையில், அவர் ஒரு காலச்சச்கரத்தைத் தன் வாழ்நாளிலே முடித்த பெருமையைப் பெறுகிறார். எத்தனையோ பேர் எங்களுக்குத் தெரியாமலே இக்காலச் சக்கரத்தை முடித்துக் கொண்டு போகிறார்கள். ஆனால் சிலருடைய அறுபதாவது ஆண்டுப் பூர்த்தி - விழாவாகக் கொண்டாடப்படுகின்றது; பலராலே நினைவு கூரப்படுகின்றது. இத்தகைய சிலருள் 'மல்லிகை' ஜீவாவும் ஒருவர்.

அறுபதாண்டுக் காலச் சக்கரத்திலே முதலாவது ஆண்டின் பெயர் பிரபவ. ஜீவா இந்த முதல் ஆண்டிலேயே பிறந்தவர். இப்பொழுது நடந்து கொண்டிருக்கும் ஆண்டு பிரபவ ஆகும். சென்ற பிரபவ ஆண்டில் (1927) ஆனி மாதம் 27ஆம்நாள் ஜீவாவினுடைய பிறந்த



ஜீவா ஒரு தமிழ் ஆக்க இலக்கியகாரர். நீண்டகால தமிழ் இலக்கிய சஞ்சிகை ஆசிரியர். நூல்வெளியீட்டாளர்.

மல்லிகை இப்போது ''மல்லிகைப் பந்தல்'' ஆகிவிட்டது.

ஜீவா ஈழத்தில் இருந்து பலநாடுகளுக்குக் கேட்கும் ஓர் இலக்கியக்குரல்.

தினம். ஜீவாவுக்கு மணிவிழா எடுப்பதற்காகப் பலரும் முயற்சி செய்து வருகின்றனர். இதற்கு ஜீவாவுக்கு என்ன தகைமை உண்டு? பல தகைமைகள் உண்டு என்பதைப் பலரும் அறிவர்.

### ஆக்க இலக்கியப் பணி

ஜீவா ஒரு தமிழ் ஆக்க இலக்கியகாரர். தண்ணீரும் கண்ணீரும், பாதுகை, சாலையின் திருப்பம் என்னும் மூன்று தொகுதிகளிலடங்கிய சிறுகதைகளை எழுதியுள்ளார். இந்த நாட்டிலே சாகித்திய மண்டலப் பரிசு பெற்ற முதல் தமிழ்ப் புனைகதை ஆசிரியர். 1961 ஆம் ஆண்டு இவருடைய 'தண்ணீரும் கண்ணீரும்' சிறுகதைத் தொகுதிக்கே சாகித்திய மண்டலப் பரிசு வழங்கப்பட்டது.

இவரது கதைகளிற் பல செக் மொழியிலும் ருஷ்ய மொழியிலும் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன. 'ஞானம்' என்ற இவரது சிறுகதை ஏ. ஜே. கனகரத்னவால் ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கப்பட்டது. இலங்கையிலேயுள்ள தமிழ் எழுத்தாளர்களில் சிறுகதை எழுதுவோர் தான் அதிகமாகக் காணப்படுகிறார்கள். அவர்களுள் தரமான கதைகளை எழுதும் தகுதி பெற்றவர்கள் எத்தனை

**-பேராசிரியர் கலாநிதி அ. சண்முகதாஸ் -**

பேர் என்பதை விரல் விட்டு எண்ணிவிடலாம். அவ்விதம் எண்ணப்பட வேண்டியவர்கள் யார் யார் என்று சிந்தித்துப் பார்க்கும் ஒருவருக்கு ஜீவாவின் பெயர் ஆரம்பத்திலேயே நினைவுக்கு உதியாதிருக்க முடியாது' என்று 1965 இல் 'ஈழகேசரி' ஜீவாவைப் பற்றி எழுதியது.

### சஞ்சிகைப் பணி

ஜீவா ஒரு நீண்டகாலச் சிறந்த தமிழ் இலக்கிய சஞ்சிகையின் ஆசிரியர். 1964 இல் 'மல்லிகை' என்றொரு மாத இலக்கிய சஞ்சிகையைத் தொடங்கி இன்று வரையும் நடத்தி வரும் ஒரு புதிய சாதனையாளன் ஜீவா. பணம் படைத்த ஒரு பெரிய நிறுவனத்தின் சஞ்சிகை அல்ல இது. பாட்டாளி வர்க்கத்திலிருந்து தோன்றிய ஒரு தரமான தமிழ் எழுத்தாளன் தன்னைச் சார்ந்த இலக்கிய நேயங்கொண்ட அன்பர்களின் ஆதரவுடன் நடத்தும் சஞ்சிகை தான் 'மல்லிகை'. 'பொறுப்புடன் எழுதப்பட்ட படைப்புகள், பொறுப்புடன் எழுதப்பட்ட கலை-இலக்கிய-சமூக விமர்சனக் கட்டுரைகளே காணப்படும். டொமினிக் ஜீவாவே எழுதும் சிறு பகுதிகள் அடக்கத்துடன் எழுதப்படுபவை. 'பார்க்கலாம்', 'முயலுகிறேன்', அப்படி ஓர் எண்ணம் உண்டு' என்று தான் இருக்கும். இலங்

(6 ஆம் பக்கம் பார்க்க)

# பரலோக வாழ்வு காட்டிய புனித இராயப்பர், சின்னப்பர்

புனித இராயப்பர், புனித சின்னப்பர் ஆகிய இருவரினதும் திருவிழாக்கள் கத்தோலிக்க திருச்சபையால் நாளை உலகெங்கும் கொண்டாடப்படுகின்றன.

இவ்விரு புனிதர்களும் சிறப்பான முறையில் கிறீஸ்துவின் பணிகளைப் புரிய அழைக்கப்பட்டவர்கள்.

> புனித இராயப்பர், புனித சின்னப்பர் ஆகிய இரு புனிதர்களின் திருவிழாக்களை கத்தோலிக்க திருச்சபை நாளை உலகெங்கும் கொண்டாடுவதையொட்டி இக் கட்டுரை பிரசுரமாகின்றது.

### புனித இராயப்பர்

புனித இராயப்பர் தமது சகாக்களுடன் மீன் பிடித்துக்கொண்டிருக்கும்போது ''மனிதர்களைப்பிடிக்க வா''என்று யேசு அழைத்ததைச் செவிமடுத்து அவர் வழி சென்றார்.

இவர் கல்வி கேள்விகளில் குறைவுற்றிருந்த போதும், தூய ஆவியின் ஏவுதலால் நிறை ஞானமும் அஞ்சாநெஞ்சமும் பெற்றுத் திருச்சபையின் முதல்வராக, முதல் பாப்பரசராக தெரிவானார்.

திருக்கூட்டத்தைத் தாங்கும் பாறையாகவும் வான்வீட்டின் திறவு கோல்களைத் தாங்கும் பேறுடையோனாகவும், திருச்சபை மந்தைகளின் மேய்ப்பனாகவும் நியமிக்கப்பட்டார்.

இவரைச் சிலுவையில் அறைந்து கொல்வதற்கு இவரது எதிரிகள் முனைந்தனர். தன்னுடைய குருநாதரான யேசுவைப்

**சீ. ஆர். யோசவ்**

போல் தன்னைச் சிலுவையில் அறைவதை விடுத்துத் தன்னைத் தலைகிழாக அறையவேண்டும் என மனுப்பண்ணினார். அவ்வாறே அவரது எதிரிகள் அவரைத் தலைகிழாக சிலுவையில் அறைந்து கொன்றார்கள்.

### புனித சின்னப்பர்

புனித சின்னப்பர் அபூர்வமான முறையில் ஆட்கொள்ளப்பட்டவர்: இவரது இயற்பெயர் சவுல். இவர் ஆரம்பத்

ஞானக்கதிர்

தில் யூதக் கொள்கைகளில் இருந்து பிறழாத ஒரு பரிசேயராய் இருந்தவர்.

கிறீஸ்தவர்களைத் துன்புறுத்தி கிறீஸ்துவமறையை நிர்மூலமாக்குவதே அவரது நோக்கமாக இருந்தது.

இவர் கிறீஸ்தவர்களைத் துன்புறுத்தி, ஹிம்சித்து, தண்டனைக்குள்ளாக்கச் சென்று கொண்டிருக்கும்போது, 'நீ துன்புறுத்தும் இயேசு நானே''

(6 ஆம் பக்கம் பார்க்க)

# "பயங்கரவாதம்" என்றால் என்ன? சார்க் மாநாட்டில் வரைவிலக்கணம்

புதுடில்லியில் நடைபெற்ற சார்க் நாடுகளின் வெளி விவகார அமைச்சர்களின் மாநாடு இவ்வாரம் அரசியல் அவதானிகளின் கவனத்தை ஈர்த்தது.

ஆறாண்டு கால அமைப்பான சார்க் 1980 ஆம் ஆண்டு பங்களாதேஷின் முயற்சியால்உருவானது. இந்தியா, பாகிஸ்தான், நேபாளம், பூட்டான், இலங்கை, மாலைதீவு ஆகியவை இவ்வமைப்பில் அங்கம் வகிக்கின்றன.

இம் மாநாடு நடைபெறுவதற்கு இரண்டு வாரகால இடைவெளியில் இலங்கை - இந்திய உறவு நலிவடைந்தது.

இலங்கை தனித்தும், சார்க் அமைப்பில் உள்ள ஒருசில நாடுகளின் மறைமுகத் தூண்டுதல் காரணமாகவும் இம் மாநாட்டைப் பகிஷ்கரிக்க எண்ணியது.

அதே வேளை இலங்கைத் தமிழருக்கு உணவுப் பொதிகளை இந்தியா விமானம் மூலம் வழங்கிய விவகாரத்தை இம் மாநாட்டில் கிளப்ப இலங்கை வெளிவிவகார அமைச்சர் சாகுல்ஹமீட் பகீரத முயற்சிகளை மேற்கொண்டார்.

இம் முரண்பட்ட நிலைப்பாடுகள் இலங்கை அரசாங்க மட்டத்தில் நிலவும் கருத்து வேறுபாடுகளின் பிரதிபலிப்பாகும்.

சார்க் மாநாட்டு அமர்வுகளில் அங்கத்துவ நாடுகளின் இருதரப்பு விவகாரங்கள் விவாதிக்கப்படமாட்டா என்பது இவ்வமைப்பு உருவான போதே உருவான 10 ஆவது சட்ட சரத்து ஆகும்.

இலங்கையின் முயற்சி இத்தீர்மானத்தை மீறுவதாக அமைந்தது.

சார்க் ஒரு அரசியல் அமைப்பு அல்ல. எனவே நாடுகளுக்கு இடையே நிகழும் இருதரப்பு விவகாரங்களுக்கு இங்கே இடமில்லை.

இரு நாடுகளுக்கிடையே பிரச்சினைகள் நிலவும்போது சார்க் மாநாட்டில் அவற்றுக்கிடையே உறவினை ஏற்படுத்தக் கூடியவற்றை நாடவேண்டும். மாறாக அவர்களின் உறவில் விரிசல் ஏற்படுத்த வல்ல பிரச்சினைகளைக் கிளப்பக் கூடாது.

- இந்தத் தொனியில் இந்திய வெளி விவகார அமைச்சர் திவாரி விளக்கம் கொடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

பயங்கரவாதம் தொடர்பாக சார்க் மாநாட்டில் மேற்கொள்ளப்பட்ட தீர்மானம் தொடர்பாக இலங்கை அரசு பெருமகிழ்ச்சி அடைந்தது போல காணப்படுகிறது.

ஆனால் அத்தீர்மானத்தை விவரமாக ஆராய்ந்தால் இலங்கை



திவாரி

யின் உள்நோக்கத்துக்கு அது வெகுதூரம் உதவாது என்பது தெளிவு.

அரசியல் தொடர்பாக நிகழும் வன்செயல்களை இத்தீர்மானங்கள் பயங்கரவாதமாகக் கருதவில்லை என்பது இங்கு தெளிவு.

இத்தீர்மானங்களை விவரமாக ஆராயலாம்.

1. நாட்டின் சட்டங்களை மீறி விமானங்களைக் கைப்பற்றும் நடவடிக்கைகள் சம்பந்தமாக 1970 டிசம்பர் 16 ஆம் திகதி ஹேக் நகரில் கைச்சாத்தான உடன்படிக்கை வர்ணிக்கும் குற்றங்கள்.

2. விமானப் போக்குவரத்து, பாதுகாப்புத் தொடர்பாக 1971 ஆம் ஆண்டு செப்டம்பர் 23 ஆம் திகதி மொண்ட்ரியலில் கைச்சாத்தான ஆவணம் வரையறுத்துள்ள குற்றங்கள்.

3. தூதரக அதிகாரிகள் உட்பட சர்வதேச ரீதியில் மதிக்கப்படும் கனவான்களுக்கு எதிராக இழைக்கப்படும் குற்றங்களைத் தடுக்கவும், தண்டிக்கவும் 1973 டிசம்பர் 14 இல் கைச்சாத்திடப்பட்ட உடன்படிக்கையின் கீழ் விவரிக்கப்பட்டுள்ள குற்றங்கள்.

4. சார்க் அமைப்பின் அங்கத்துவ நாடுகள்

**- வே. வரதசுந்தரம் -**

தமக்கிடையே குற்றவாளிகளைத் தண்டிக்கவும், அல்லது நாடு கடத்தவும் கைச்சாத்திட்டுள்ள உடன்படிக்கைகள் விவரிக்கும் குற்றங்கள்—

5. கொலைகள், மனிதர்களை வெட்டி ஒழித்தல், உடலுக்கு காயம் விளைவிக்கும் விதத்தில் மேற்கொள்ளப்படும் தாக்குதல்கள். ஆட்கடத்தல், பணயக் கைதிகளாக மக்களைப் பிடித்தல், அபாயகரமான ஆயுதங்கள் வெடிமருந்துகள் சம்பந்தப்பட்ட குற்றங்களை எல்லைவரையின்றி மனிதர்கள் உடைமைகளை அழிக்கும் நோக்குடன் இழைத்தல்—

இவற்றின் அடிப்படையில் அரசியல் காரணங்களினால் உந்தப்பட்ட அல்லது அரசியலுடன் சம்பந்தப்பட்ட குற்றங்கள் தவிர்ந்த ஏனையவற்றை அடிப்படையாகக் கொண்டு சார்க் அங்கத்துவ நாடுகள் தமக்கிடையே நாடு கடத்தல் உடன்படிக்கைகளைச் செய்து கொள்ளலாம்.

'அரசியல் காரணம்' என்ற சொற்றொடர் இங்கு குறிப்பிடத்தக்கது. அரசியல் காரணங்களுக்காக வன்செயல்களில் ஈடுபடுவோர் போராளிகளாக, தீவிரவாதிகளாக வரைவிலக்கணம் செய்யப்படுவதற்கு இங்கு சாத்தியம் இருப்பது தெளிவு.

'செவிடர்கள், குருடர்கள், ஊமையர்களை உறுப்பினர்களாகக் கொண்ட அமைப்பா சார்க்?'— என்று இம் மாநாட்டில் உரையாற்றும்போது ஹமீட் ஆத்திரத்துடன் கேள்வி எழுப்பியுள்ளார்.

ஆனால் இம் மாநாட்டின் செயற்பாடு மூலம் அதன் தலைமைத்துவத்தைப் பெற்றுள்ள இந்தியா உலகுக்கு ஒரு செய்தியை உணர்த்தி உள்ளது.

உலகில் நிகழும் மனித உரிமை மீறல்களை, மானுட அவஸ்தையைக் கண்டு இவ்வமைப்பு வெறுமனே குருடராய்ச் செவிடராய் ஊமையராய் வாளாவிருக்காது.

—இதுவே அந்தச் செய்தி ஆகும். ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நயமாக உரைத்த பண்டிதமணியின் நா; நீட்டி முழக்கினும் சுவைகுன்றாப் பேச்சு

இற்றைக்கு எண்பத்தழு ஆண்டுகளுக்கு முன், சந்திரபுரம் என்னும் மட்டுவில் வாசியாய சோதிடர் ஒருவர் பண்டிதமணி அவர்களுக்கு எழுதிய சாதகபலன் சரியாக நடைபெற்று வந்தது. பண்டிதமணி அவர்களுக்குச் சோதிடத்தில் நல்ல நம்பிக்கையிருந்தது.

வித்தைத, புத்தியுடைமை, பலவித சாஸ்திர பரிசிலனை, வயோதிபத்தில் ஞானநிறைவு, இராசாங்க கௌரவம், தீர்க்காயுள் என்பன ஒரு பக்கயோகங்கள். காரிய சமர்த்து, நூலாராய்ச்சி, சுதந்திரமுடைமை, சாஸ்திரவல்லபம், மங்களவாக்கு, சனரட்சகம், குலமுதன்மை, சத்தியமுடைமை, கல்வித்தேர்ச்சி, அறிவு விருத்தி, பாண்டித்தியம், வித்துவத்தன்மை ஆன்மஞானம்வேற்றாரும்தன்னூர் போலாதல் முதலியன இன்னொரு பக்கம். இவ்வண்ணமாக இவருடைய சாதகத்திலே சாஸ்திர வாராய்ச்சியும் பேச்சும் எழுத்தும் உரையாடலும் இன்ன பிறவும் நன்கு அமைந்துள்ளன.

கலாநிலையத்திலும் கலைநிகழ்ச்சிகளிலும் கனிவாகவும் காரசாரமாகவும் பேசிவந்த பண்டிதமணி அவர்களை வாலிப மாநாட்டினர் விட்டுவைக்கவில்லை. மகாத்மா காந்தியடிகளை ஈழத்துக்கு வரவழைத்த இளைஞர்களாய ஹண்டி பேரின்பநாயகம், ஐ. பி. துரைரத்தினம், மு. பாலசுந்தரம், கலைப்புலவர் நவரத்தினம், காந்திப் பக்தர் மலேசிய துரைராசசிங்கம், கு. நேசையா எஸ். ஆர். கனகநாயகம், ஒறேற்றர் சுப்பிரமணியம் முதலானோர் முன்னர் முற்போக்குடையவர்களின் முன்னோடிகளாயிருந்தனர். காந்தியடிகளின் வரவு அவர்களை நற்போக்குவாதிகளாயும் பணிபுரியத் தூண்டியது.

அன்று முற்றவெளியில் பாரிய பந்தரில் பண்டிதமணி அவர்களின் பேச்சு. பந்தர் நிரம்பிப் பக்கங்கள் தோறும் மக்கள் வரிசை வரிசையாய் நின்றார்கள். காலை ஒன்பது மணிக்கு ஆரம்பித்த பண்டிதமணி அவர்களின் பேச்சு, பத்து, பதினொன்று, பன்னிரண்டு மணிவரையும் தொடர்ந்தது. விடயம் எல்லோரும் கேட்டுப் பழகிய பழைய விடயம்தான். சின்னத் தம்பிப்புலவர் பற்றிப் பேசிக் கொண்டே போனார்.

### பண்டிதமணி
### வரலாறும் காலமும்

மக்களிடை அலுப்பு, தெவிட்டு உண்டாகவில்லை. இன்னும் பேசமாட்டாரோ என்று பலரும் யோசித்தமை அவர்களுடைய முகபாவனையிற் புலனாயிற்று. புன்முறுவல் ஒளிவீசப் பண்டிதமணி அவர்களின் பேச்சு ஒலி வீசிக் கொண்டே போனது. இடையில் பண்டிதமணி அவர்கள் குரலை மாற்றிப் புலவரின் பள்ளுப்பிரபந்தத்திலிருந்தும் கோவைப் பிரபந்தத்திலிருந்தும் பாடல்களை இனிமையாகப் பாடினார். இராமாயணத்தில் ஊறிக் கிடந்த பண்டிதமணி அவர்களுக்குக கரவை வேலன் கோவையில் வரும் 'பூவென்ற மாவிலங்கேசனைப் போர் புரிய நாளை வா வென்ற வீரன் கரவையில் வேலன்' என்னும் பாடல், 'ஆளமாவுனக்கு அமைந்தன மாருதம் அறைந்த பூளையாயின கண்டனை, இன்று போய்ப்போர்க்கு நாளைவா' எனக் கோசல நாட்டு வள்ளலான இராமன், உலகத்தை வென்ற இராவணனுக்கு அவனுடைய நாட்டிலே வைத்து உயிர்ப்பிச்சை கொடுத்து அனுப்பினான் என்ற பாடலை நினைவு செய்தது. செய்யவே அவர் இராமாயண காவியத்தில் தாவிச் ஜனரஞ்சகமாக அதனை விமர்சனஞ் செய்வாராயினர். வெயிலேற வெப்பமேறப் பண்டிதமணியவர்களின் பேச்சு அவற்றைத் தணித்துக் குளிர்மை செய்தது. பேச்சைக் கேட்டுக்கொண்டிருந்த பண்டித ம. வே. மகாலிங்கசிவம் அவர்கள் கண்ணீர் வடித்தார்கள். பாடசாலைப் பரிசோதகராய பிரம்மஸ்ரீ சதாசிவ ஐயர் அவர்கள் பண்டிதமணி அவர்களைப் பள்ளிக்கூடங்கள் எங்கும் கொண்டு திரிவதற்குக் கங்கணம் கட்டினார்கள்.

பண்டிதமணி அவர்களின் பேச்சைக் கேட்டுப் பழகிய அவருடைய மாணக்கர் சிலர் ஒருவருடைய குரலிலேயே அவர் பேசுகிற மாதிரியில் பேசவும் தொடங்கினார்கள். இது பணிவன்பு காரணமாக உண்டாகும் ஒரு வகை ஊக்கம் என உளநூலார் கருதுவர். தலைசிறந்த உளநூல் நிபுணரும் விஞ்ஞானத்துறையில் முதுமாணிப் பட்டம் பெற்றவருமான அருள்நந்தி அவர்கள் ஒருமுறை மாணக்கன் ஒருவர் பண்டிதமணி அவர்களைப் போலப் பேசக் கேட்டு, ஓடிச் சென்று கேட்டு வியந்து வெட்கினார்.

''நயம்படவுரைக்கும் நா'' என்று அரச கருமமொழித் திணைக்களத்து உதவி ஆணையாளர் கோப்பாய் மயில்வாகனம் அவர்கள் வியந்ததோடு, பண்டிதமணி அவர்களைப் போலப் பேசப் பழகப் பெரிதும் முயன்றதும் உண்டு. வாயூறியதுதான் மிச்சம்.

கண்டதும் கேட்டதும் என்னும் தலைப்பில் ஹண்டி பேரின்பநாயகம் அவர்கள் தம்மை மறந்த செய்தியை எழுதியுள்ளார்: 'கூட்டத்துக்குப் போனேன். மெல்லிய நெடுவல் ஆளொருவர் எழுந்தார். பின்குடுமி, மேலிலே சால்வை மாத்திரம். சட்டையில்லை. முதற் பதினைந்து நிமிடம் அருகிலிருந்தவர்களுக்குத்தான்கேட்டது. சிறிது சிறிதாகக் குரல் உயர்ந்தது. யாவரும் கேட்க முடிந்தது. கேட்டார்கள். ஆடாமல் அசையாமல் இருந்தார்கள். இடையிடையே வயிறு குலுங்கக் குலுங்கச் சிரித்தார்கள். பேச்சாளர் முகத்தில் புன்சிரிப்புத்தான். கல்லின் மேல் கல்லுவைக்க வளரும் கட்டடம் போற் பேச்சு வளர்ந்தது'' ஹண்டி அவர்கள், சின்னத்தம்பிப் புலவர் பற்றி எத்தனை முறையும் கேட்டு ரசிக்க விருப்பந் தெரிவித்திருந்தார்.



தாமே தலைசிறந்த நகைச் சுவைப் பேச்சாளராய்ப் புகழ்பெற்ற பொன் கிருஷ்ணன் அவர்கள், பண்டிதமணி அவர்களின் பேச்சைப் பற்றிக் கூறும்போது 'நேரமேறச்சுவையேறும் பேச்சு' என்றார். 'பிரசங்கத்தின் தரமும் ஏறமளத்தர்கள் சிலைபோலாகிவிடுவர். இடைக்கிடை கேட்டுக்கொண்டிருப்போர் வாயிலிருந்து வெடித்தெழும் சிரிப்பு, அவர்கள் சிலைகள் அல்லர் என்பதைப் புலப்படுத்தும்'' என்பர்.

'அவரின் சொல்லெளிமையில் வந்த சுவையே அவரின் பேச்சு நயத்துக்குக் காரணமாகும். எவ்வளவு கடுமையான விஷயத்தையும் அவர் இலேசாக வாழைப் பழத்தில் ஊசி ஏற்றுந் தன்மையில் பதித்து விடுவார்.

பண்டிதமணி அவர்கள் கோயில்களிலே பலியிடுவதைத் தடுப்பதற்கு பேசிவந்த பேச்சில் ஈடுபட்டவர் தாமே சிறந்த ஆங்கிலப் பேச்சாளராய ஒறேற்றர் சுப்பிரமணியம் அவர்கள். பண்டிதமணி அவர்களின் பேச்சுத் தொடர்கள் பெரும் பயன் விளைவித்தமையை ஒறேற்றர் வெகுவாகப் பாராட்டியுள்ளார். கலாநிதி பொன்னையா அவர்கள் பண்டிதமணி அவர்கள் மேற்கு நாட்டிற் பிறந்திருந்தால் இவரது நிலை எண்ணுந்தரத்தன்று'' என்பர் ''இவரைப் போலப் பேசவல்லவர் இன்னொருவரைக் காணமுடியாது'' என்று சுன்னாகம்குமாரசுவாமிப் புலவர் அவர்களின்மைந்தன் அம்பலவாணபிள்ளை பாராட்டியுள்ளார். நவாலியூர்ச் சோமசுந்தரப் புலவர் அவர்களுக்குப் பொன்னாடை போர்த்த பெருவிழாவில் சிறப்புச் சொற்பொழிவாற்றிய பண்டிதமணியவர்கள் புலவர் அவர்களின் ஆடிப்பிறப்பு, கத்தரித்தோட்டத்து வெருளி முதலான பாடல்களுக்கு விமர்சனம்செய்து பேசியமை, ஆங்கிலத்தில் ஹாஸ்லிற் முதலானோரின் ரசனையை ஒத்தது.

பண்டிதர் அவர்கள் வேதாகம சங்க வருடாந்தக் கூட்டமொன்றில் ''மறைகள் நிந்தனை பொறு மனம்'' பற்றி மூன்று நாள்கள் பேசியவற்றைக் கேட்ட குமாரசுவாமிக் குருக்கள் முதலான அந்தணர்கள் அருமையாகப் புகழ்ந்து பாராட்டினார்கள். நாவலர் சங்கர பண்டிதர், செந்திநாதஐயர் முதலானோர்வரிசையில் இவர் பேசினார் என்றார்கள்.

பண்டிதமணி அவர்கள் நாற்பது ஆண்டுகளுக்கு முன் கொழும்புத்தமிழ்ச் சங்கத்தில் சேர். கந்தையா வைத்தியநாதன், கே. ஆழ்வாப்பிள்ளை முதலானோர் தலைமையிற் பேசியவற்றை இன்றுந்தான் கொழும்புத் தமிழர் பாராட்டுகிறார்கள். இவர் ஒரு கட்டத்தில் திருவள்ளுவர் கண்ட பெண்மையை விளக்கி, அப் பெண்மை சீதை என்று பெயர் சொல்லப் பட்டுக் கம்பருடைய காவிய கருப்பத்தின்னும் பிரசவம் ஆகிறது என்றார். இன்னொரு கட்டத்தில் இளங்கோ கண்ட கண்ணகியையும் விளக்கியபின், முடிவுரையில், ''ஓ தமிழ்ச் சங்கமே! கண்ணகியை வள்ளுவரில் உரைத்துச் சீதையோடொப்பிட்டு அவள் எடையைக் காமஞ் செப்பாது கண்டது மொழிமோ!'' என்று கூறுமுகத்தால் சீதையையும் கண்ணகியையும் எடை போட விடுத்தார். -(வளரும்)

க. சி. குலரத்தினம்

## வல்லவனுக்கு வல்லவன்

மங்களபுரியை மகேந்திரவர்மன் ''இரண்டாவது தருமர்'' என்று தனதுமக்களும் அண்டை நாட்டு மக்களும் புகழும் வண்ணம் அறம் தழைக்க ஆட்சி செய்தான். அவனது அரண்மனையில் விஜயசேகரன் என்ற மந்திரி இருந்தான். அவன் உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசும் இயல்பினன். அவன் ஏவியதைச் செய்ய ஆனந்தன் என்ற ஒரு கொடிய நாவிதன் இருந்தான். அங்கு சேனாதிபதியாக இருந்த சங்கரவர்மன் மிக நல்லவன். மங்களபுரி மீது படையெடுத்து வரும் தானை வீரர்களது பனைவிகளின் மங்கல நாண்களைக் கழற்ற வைக்கும் சிறந்த வீரன். அவன் இம் மந்திரியினதும் நாவிதனதும் செயல்களை மிக உன்னிப்பாகக் கவனித்து வந்தான். அவர்களது செயல்கள் சந்தேகமூட்டுவதாக அமைந்தபடியால் மந்திரிக்கும் நாவிதனுக்கும் எச்சரிக்கை செய்து வந்தான். இதனால் அவர்களிருவரும் சினங்கொண்டு சேனாதிபதியைப் பழிவாங்கக் காத்திருந்தனர்.


ஒருநாள் வஞ்சக மந்திரியின் உயிரைக் காலன் மாரடைப்பு நோய் வடிவாக வந்து கவர்ந்தான். இறக்கு முன் மந்திரி நாவிதனையே தனது பதவிக்கு உயர்த்துமாறு கூறி விட்டு இறந்தான். அரசனும் மந்திரி செடுதியைக் கூறுவானா என்று நாவிதனுக்கே மந்திரிப் பதவியை அளித்தான்.

ஒரு நாள் நாவிதன் சேனாதிபதியைக் கொல்வதற்கு இரு முரடர்களை ஏவி அவன் வீட்டிற்குப் போகும் போது கொல்லுமாறு தெரிவித்தான். இதனை அறிந்த சேனாதிபதியின் மகன் தனது தந்தைக்கு மந்திரியைப் போல் வேடமிட்டு உண்மையான மந்திரி வீட்டிற்குச் செல்லும்பாதை, நேரம் முதலியவற்றை இரு முரடர்களுக்கும் சொல்லும்படி புத்தி கூறினான்.

சேனாதிபதியும் அவ்வாறே செய்ய இரு முரடர்களும் மந்திரி செல்லும் பாதையில் உள்ள மரம் ஒன்றில் வில்லம்புகளோடு ஏறி நின்றார்கள். நயவஞ்சக மந்திரி அவ்வழியே வரும்போது இருட்டுக் காரணமாக அவன் யார் என்று அறியாமையால் விஷ அம்புகளை அவன் மேல் விடுத்தார்கள். அம்புகள் தைத்த உடனேயே மந்திரி விஷம் காரணமாக இறந்தான். சேனாதிபதி வல்லவனுக்கு வல்லவன் வையகத்தில் உண்டென்ற முதுமொழியை நிரூபித்ததற்காக மகனைப் பாராட்டினான். ★

சு. சுஜிதரன்
[யாழ் இந்துக் கல்லூரி]






## சேய் நலன் பேணத் தாய்ப்பால் ஊட்டுங்கள்

உங்கள் குழந்தைகள் ஆரோக்கியமாக வளர்வதற்குத் தாய்ப்பாலே சிறந்த உணவாகும். தாய்ப்பாலில் குழந்தைகளை இலகுவில் தாக்கும் நோய்களை தடுக்கும் சக்தியிருக்கின்றது.

குழந்தைகள் பிறந்து ஆறுமணித்தியாலங்களுக்குப் பின்பு தாய்ப்பால் ஊட்டத் தொடங்கலாம். தாய்மார்கள் பால் சுரக்கவில்லை என்று கவலை கொள்ளாது நல்ல சத்துள்ள உணவுகளை நேரம் தவறாது சாப்பிட்டு வந்தால் தாய்ப்பால் சுரக்காமல் ஒருபோதும் விடாது. குழந்தைகளை நன்றாக உமியவிடவேண்டும். இதனால் தாய்ப்பால் நன்றாகச் சுரக்க ஏதுவாகின்றது.

குழந்தைகளுக்கு நான்கு மணித்தியாலங்களுக்கு ஒருதடவை பால் ஊட்டவேண்டும். பால் ஊட்டுவதற்கு முன்பும் பின்பும் முலைக்காம்புகளை நன்றாகக் கழுவுதல் நன்று.

குழந்தைகளுக்குப் பால் ஊட்டும் தாய்மார் தினமும்பால், மீன், முட்டை, பாரைக்கருவாடு, நெத்தலி, பருப்பு, மரக்கறி, இலைவகைகள் சாப்பிடவேண்டும். சாப்பாட்டிற்குப் பின்பு மாம்பழம், இதரைவாழைப் பழம் அல்லது பப்பாசிப் பழமாவது சாப்பிட வேண்டும்.

தினமும் நன்றாகக் குளிர்ந்த நீரில் குளித்து சுத்தமாகவும் சுகாதாரமாகவும் இருக்கவேண்டும். உடலில் சூடு உள்ளவர்கள் மதியபோசனத்துடன் தயிர் மோர் சாப்பிடுவது நன்று.

பாலூட்டும் நேரங்களில் கவலையடைந்திருத்தல், சண்டைபிடித்தல், கோபமாக உரத்துப் பேசுதல் ஆகியவற்றைத் தவிர்த்துக் கொள்ளவேண்டும்.

உங்கள் குழந்தைகளுக்கு இரண்டுவயது வரை பாலூட்டலாம். பாலூட்டும்போது கதிரையில் இருந்தோ, படுத்திருந்தோ பால் ஊட்டக்கூடாது. தரையில் சப்பாணி கொட்டி உட்கார்ந்து குழந்தையின் தலையைச் சற்று உயர்த்திப் பாலை ஊட்டவேண்டும். பால் ஊட்டிய பின்பு குழந்தையைத் தோளில் போட்டு முதுகில் மெதுவாக இரண்டு மூன்று தடவை தட்டி விடவேண்டும்.

நவநாகரிக உலகில் வாழும் இன்றைய தாய்மார்கள் வாழ்க்கைச் செலவைச் சமாளிப்பதற்காக ஏதாவது தொழில்செய்யும் நிர்ப்பந்தத்துக்கு ஆளாகின்றார்கள். அவர்கள் வீட்டில் இருந்து நேரத்துக்கு நேரம் பிள்ளைகளுக்குப் பாலூட்டமுடியாத நிலை ஏற்படுகின்றது.

இதனால் கடைகளில் விற்கும் மா பக்கட்டுகளை வாங்கிப் பால் ஊட்டி வருகின்றார்கள். இதன் காரணமாகப் பிள்ளைகளுக்கு வாந்திபேதி, வயிற்றோட்டம் போன்ற நோய்கள் அடிக்கடி வருகின்றன.

இயன்றவரை தாய்மார்கள் குழந்தைகளுக்குத் தாய்ப்பாலை ஊட்ட முயலவேண்டும். தாய்ப்பால் குடித்து வளரும் குழந்தைகள் எதிர்காலத்தில் ஆரோக்கியமான உடல் வளர்ச்சியோடு கருணை, பாசம், இரக்கம் உள்ளவர்களாகக் காணப்படுவார்கள். இது உளவியல். ★

★ என். இராமச்சந்திரன் ★

### குரக்கன்மா சொக்லட் கேக்

**தேவையான பொருள்கள்:**

குரக்கன் மா - 1 கப்
கோதுமை மா - 1 கப்
மாஜரீன் - 6 அவுன்ஸ்
சீனி - ½ இறுத்தல்
பேக்கிங் பவுடர் 1 தேக்கரண்டி
டாட்டா - ½ தேக்கரண்டி
முட்டை 3
பால் ½ கப்

**செய்முறை:**

மாஜரீனையும் சீனியையும் நன்றாக அடிக்கவும். அதன் பின் முட்டையையும் சேர்த்து நன்கு அடிக்கவும். அதன் பின் அரித்த மாவையும் பேக்கிங் பவுடரையும் அந்தக் கலவையினுள் சிறிதுசிறிதாகச் சேர்த்து ½ கப் பாலையும் இட்டு கலவையை நன்கு சேர்த்துக்கொள்ளவும். அதன்பின்பு கேக்தட்டில் ஊற்றி அவற்றை வேக வைக்கவும் (Bake பண்ணவும்) ஆறிய பின்பு [illegible] வும்.

மா. [illegible]

### கருவேப்பிலைக் குழம்பு

தேவையான பொருட்கள்:-

கருவேப்பிலை ஒரு பிடி
தக்காளிப்பழம் இரண்டு
செத்தமிளகாய் பத்து
உளுத்தம்பருப்பு அரை தேக்கரண்டி
துவரம்பருப்பு 1 தேக்கரண்டி
புளி - நெல்லிக்காயளவு
மிளகு - அரைத் தேக்கரண்டி
சீரகம் - அரைத் தேக்கரண்டி
கடுகு - கால் தேக்கரண்டி
பெருங்காயம் சிறிதளவு
தேவையான உப்பு
நெய் - ஒரு மேசைக் கரண்டி

தயாரிக்கும் முறை:-

கருவேப்பிலை, தக்காளிப்பழம் முதலியவற்றைச் சுத்தப்படுத்தி தக்காளிப் பழத்தைச் சிறிது நேரம் வெந்நீரில் போட்டு வைக்கவும். பிறகு தோலை அகற்றித் துண்டுகள் செய்யவும். [illegible] நெய் விட்டு செத்தல் மிளகாய், உளுத்தம் பருப்பு, துவரம் பருப்பு, மிளகு ஆகியவற்றைக் காந்தாமல் வறுத்துக் கொண்டு, கடுகு, சீரகம், பெருங்காயம் முதலியவற்றைத் தாளித்துக்கொண்டு. தக்காளிப்பழத்தையும் வதக்கி எடுத்துக் கொள்ளவும். வறுத்து வைத்திருக்கும் பொருள்களுடன் புளி, உப்பு, கருவேப்பிலை ஆகியவற்றையும் சேர்த்து நன்றாக மசிய அரைக்க வேண்டும். சுமார் 3 கிளாஸ் (600 மி. லீ.) நீரில் கலந்து ஒரு பாத்திரத்தில் விட்டு அடுப்பில் வைக்கவும். பிறகு தாளிதத்தையும் அதில் சேர்த்துக் கொதிக்க விடவும். சிறிது நேரம் குழம்பு வற்றியவுடன் தீயிலிருந்து இறக்கி, வெங்காயத்தைப் பொடியாய் நறுக்கி வதக்கிக் குழம்பில் சேர்த்துப் பயன் படுத்தலாம்.

- எஸ். கேதீஸ்வரி

### பெரியார் நினைவு

## அகதிகள் நலன் காத்த விசுவலிங்கம் ஐயா!

மக்களுக்காற்றும் சேவை மகேஸ்வரனுக்காற்றும் சேவைக்குச் சமம் என்று சொல்லிலும் செயலிலும் காட்டிய விசுவலிங்க ஐயா பாதிக்கப்பட்ட எம்மின மக்களைப் பிரிந்து ஓராண்டு ஆகிறது. நீங்கள் எம்மைவிட்டு பிரிந்தாலும் உங்கள் 'சேவையை மறந்திடமுடியுமோ?

''மனதில் உறுதிவேண்டும், வாக்கினிலேஇனிமை வேண்டும், நினைவில் நல்லதுவேண்டும். கனவு மெய்ப்படவேண்டும், காரியத்தில் உறுதிவேண்டும், உண்மை நின்றிட வேண்டும்'' என்ற பாரதியாரின் வாக்கின்



படி செயல்பட்ட அரச உத்தியோகத்தில் உயர் பதவியில் இருந்த காலத்தில், உங்களுடன் சேவையாற்றிய அன்பர்கள் கஷ்டமுற்றவேளையில் அவர்களது கஷ்டம் நீங்க உதவியதைப்போல் இனவன்செயலால் பாதிக்கப்பட்ட எம்மின மக்கள் ஆதரவற்று, பஞ்சையாய், பராரியாய், வற்றாத கண்ணீருடன் அகதிகளாய் வந்தபொழுது, அவர்களுக்கு ஆதரவளித்து, அன்புமொழிகூறி, துயர் துடைக்கத் தாங்கள் ஆற்றிய சேவை எம் நெஞ்சை விட்டகலா.

வன்செயலால் பாதிக்கப்பட்ட மக்களுக்குப் புனர்வாழ்வு அளிக்க, அவர்கள் சுயமரியாதையுடன்வாழவழியமைக்க, 'பல தடவை, பல மைல் தூரம் கால் நடையாக நல்ல ஊண், உறக்கமின்றி சேவை செய்தீரே, அப்படிச் சேவையாற்றும் பொழுது ஏற்பட்ட நோயையும் பொருட்படுத்தாது, இறைவன் கைவிடமாட்டான் என்று கூறியது என்றும் நினைவில் நின்றகலாது.

ஒரு சிலர் குறைகள் கூறியதை அறிந்தும் எவர்கள் எதையாவது கூறட்டும், நீதியுடன், நேர்மையுடன் செயற்படுவேன் இறைவன் துணை செய்வான் என்று இறைவன்மேல் பழியைப் போட்டு நேர்மையுடன் உறுதியுடன் சேவை செய்தீர்கள். தமிழன் பிச்சையெடுத்து வாழக்கூடாது, வாழவிடவும் கூடாது என்று பாதிக்கப்பட்ட மக்களுக்குச் சேவையாற்றிய செம்மலன்றோ நீர்.

பாதிக்கப்பட்ட எம்மின மக்களுக்குப் புனர்வாழ்வு அளிக்க அந்நிய நாட்டிலிருந்து பெறும் நிதியுடன், நம்நாட்டில் நம்மக்களிடமிருந்து நிதி திரட்டி உதவவேண்டும் என்று திட்டம் வகுத்து செயற்பட்ட தியாகச் சுடர்.

தமிழரது கல்வி, கலை, கலாசாரம் பேணிப்பாதுகாக்கப்படவேண்டும் என்று பல அமைப்புக்களுடன் தொடர்பு கொண்டு பணியாற்றிய தொண்டர். உங்களது மரணச்சடங்கில் பங்குபற்றி உரையாற்றிய பேராசிரியர் சிவத்தம்பி அவர்கள் விசுவலிங்க ஐயாவின் ஆத்மாசாந்தி அடையாவிடில் வேறு எந்த ஆன்மாவும் சாந்தியடையாது என்று கூறியது இன்றும் ஒலிக்கிறது. ★

ஆ. கனகசபாபதி

### மிகப் பெரியவை எவை?

| | | |
|---|---|---|
| கண்டம் | — | ஆசியா |
| சமுத்திரம் | — | பசுபிக் |
| மலை | — | இமயம் |
| கடல் | — | மலாய்க்கடல் |
| நதி | — | நைல்நதி |
| பட்டணம் | — | இலண்டன் |
| மதில் | — | சீனமதில் |
| மணி | — | மொஸ்கோ மணி |
| பாலைவனம் | — | சஹாரா |

தொகுப்பு: பேரின்பராசா,
பேராறு பரமேசுவரா மகாவித்தியாலயம்,
கந்தளாய்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கவிதைக் கதம்பம்

### மௌனம்

மௌனமே!
உனக்கு அர்த்தங்கள்
பலப்பல உள்ளன!
''சர்வார்த்தசாதனம்''
என்பதும் உன்பெயர்!
எப்படி என்றுதானே
என்னைக் கேட்கிறாய்?

சுமத்தும் குற்றம்
சுத்தமானதெனில்
குற்றம் சுமப்பவன்
நாடுவதுனையே!

சுமத்தும் குற்றம்
பொய்யென்றாலும் —
விளக்கம் தருவதால்
நல்விளைவெதுவும்
விளையாதென்பதை
உணர்ந்து கொண்டால் —
நிர்க்கதியான
நிரபராதிக்கும்
நீயே தஞ்சம்!

வாதங்களுடனே
பிரதிவாதங்கள்
முட்டிமோதி
மோதல் தோன்றும்
நிலைவந்துவிட்டால்—
இருதரப்பாரில்
ஒருதரப்பாரிடம்
நீ குடி கொண்டால் —
எவ்வித நிலைமையும்
சமநிலையடையுமே!

சொல்லம்புகளால்
ஒருவன் சாட —
சாடப்படுபவனுக்கு
உன் துணையிருந்தால்
சாடுபவன் உடனேயே
முட்டாளாகின்றான்!

சிரிப்புக் கதையினைச்
சொல்லுவதாக எண்ணிக்
கழுத்தை அறுப்பவர்
கதை சொல்லி
முடிக்கும் போது—
கதைகேட்டவர்களுடன்
நீ கலந்திருந்தால்
கதை சொன்னவரது
அழகு முகத்தில்
அசடு வழியுமே!

திருமணத்துக்குச்
சம்மதம் கூறிட —
''நாணம்'' என்பதைக்
குறைவறப் பெற்ற
கன்னியருக்கும்—
வேண்டும் மொழி
உன்மொழிதானே!

பலர் முன்னிலையில்
புகழப் பெறுபவர் —
புகழுக்குரியவர்
அடக்கமுடையவரெனின்—
உன்னைத்தானவர்
பற்றிக் கொள்வார்!

முற்றும் துறந்த
துறவிகள் ஞானிகள்
கற்றுத் தெளிந்த
அறிஞர்கள் மேதைகள்
உன்னுறவைத்தான்
பெரிதும் போற்றுவர்!

சிற்சில வேளையில்
சிற்சில இடங்களில்
சிற்சில விடயத்தை
அறியாதவர்களும்
தம்மறியாமையை
அடுத்தவர்கள்
அறியாதிருக்க நீ
துணை செல்வதுண்டு!

பேசிப்பேசிப்
பெற்றது என்ன?
பேசப்பேசச்
சக்திதான் குறையும்!
ஆதலின் — மக்கள்
உன் கை பிடித்தால்
சக்தியேனும்
மிச்சமாகுமே!

உண்மையில் நீயொரு
சர்வார்த்தசாதனமே!
இப்பொழுதாகிலும்
இதனை ஏற்றிடு—
மௌனம் ஏனோ?
சம்மதம் தானே!!

''சரவண — முருகா''

### விழித்தெழு! வீரா!!

விழித்தெழு வீரா - தாயின்
விரிந்த இருளிரிய
ஆழி எழுந்தாலும் - வீரா
ஆக்கம் அழிக்காதே.

வெற்றிக் கொழுவேறி - வீரா
விண்ணைப் பழித்திடுவாய்
உற்ற விடமெல்லாம் - எந்தாய்
ஊர்பெயர் இட்டிடுவாய்

தங்க மனைகட்டி - அதில்
தாயை இருத்திடுவாய்
சிங்க உறுதிகொண்டு - வீரம்
சிறக்க நடந்திடுவாய்.

— தொல்புரக்கிழார் —

# அலை தாண்டி அருள் வேண்டும்

# அன்பர் வினை நீக்கும் நாகபூசணி

யாழ்ப்பாணத்துக்கு அண்மையில் மேற்குப்புறமாக உள்ள சப்த தீவுகளில் ஒன்றாக விளங்குவது நயினாதீவு.

இத்தீவில் அன்னை ஸ்ரீ நாகபூஷணி அம்பிகையானவள் சக்தி பீடங்கள் அறுபத்திநான்கினில் ஒன்றாகத் திகழும் புவனேஸ்வரி பீடத்தை தன்னகத்தே கொண்டு அதனை அலங்கரித்து அருள்பாலித்துக்கொண்டிருக்கிறாள். சக்தியின் அருட்பொலிவுள்ள

**மதுரையின் கண் மீனாட்சியாகவும், காஞ்சியில் காமாட்சியாகவும், காசியில் விசாலாட்சியாகவும், நாகபட்டினத்தில் நீலாயதாட்சியாகவும், உறையும் மாபெரும் அருட் சக்தியே நயினையில் நாகபூஷணியாகவீற்றிருக்கின்றாள்.**

இடங்களே சக்திபீடங்கள் எனப்படும்.

இந்த வகையில் மதுரையில் மீனாட்சியாகவும், காஞ்சியில் காமாட்சியாகவும், காசியில் விசாலாட்சியாகவும், நாகபட்டினத்தில் நீலாயதாட்சியாகவும், உறையும் மாபெரும் அருட் சக்தியே நயினையில் நாகபூஷணியாக வீற்றிருக்கின்றாள்.

இலங்கையின் வட பாகத்தில் நாகர்கள் வாழ்ந்தார்கள். அவர்கள் நாகத்தை வழிபட்டனர் என நாம் இதிகாச நூல்களின்வாயிலாக அறியக்கூடியதாக உள்ளது. நயினை அம்மன் கோவில் மூலஸ்தானத்திலே சுயம்புவாய் அமைந்துள்ள ஐந்துதலை நாகச்சிலை இதற்கு சான்றாக உள்ளதென ஆய்வாளர்கள் கருதுகின்றனர்.

இந்த நாகச்சிலை சுமார் பதினான்காயிரம் வருடம் பழைமையுடையது. இங்குள்ள பழைய வழிபாட்டுப் பொருள் இதுவே. சரித்திரத்தில் கூறப்படும் சர்ப்ப வழிபாட்டுக்கு இலங்கையிலோ, இந்தியாவிலோ வேறு எங்கும் பார்க்கமுடியாத வகையில் பாம்பின் படத்தினால் இயற்கையாக சுற்றப்பட்டதாக இது அமைந்திருக்கிறதென்றும் ஆய்வாளர்கள் கூறுகின்றார்கள்.

புராதன வழிபாட்டு இடமாய் அமைந்த இக்கோவிலின் ஆரம்பநிலை பற்றி அறிதற்கு தற்போது தக்க சான்றுகள் கிடைத்திடுமெனினும், சிலப்பதிகார காலச் செட்டிமார் வாணிபத்தின் நிமித்தம் இங்கு வந்துபோயினர். அம்மனைப் பூசிக்க பூவுடன் கடல்வழியே வந்த நாகத்தை தாக்க முயன்ற கருடனை அவ்வழி வந்த செட்டியானவன் விலக்கி கப்பலில் இருந்த தன் திரவியத்தைக் கரைசேர்த்து கோவிலைச் செப்பமிட்டு நயினாப் பட்டர் என்ற பிராமணரினை பூசைக்கு நியமித்தான். அதனால் இத்தீவு நயினாதீவு என அழைக்கப்பட்டதாகவும் கருத இடமுண்டு. இதற்கு அறிகுறியாக கோவிலின் வடபால் கடலின் நடுவே பாம்பு சுற்றிய கல்லும், அதை உண்ணப்பார்த்திருந்த கருடன் வீற்றிருந்தகல்லும் இப்பொழுதும் இருக்கக் காண்கிறோம். நாகத்தால் பூசிக்கப்பட்ட அன்னையானவள் நாகபூஷணி எனப் பெயர்பெற்றாள் என்பர்.

ஒல்லாந்தர் காலத்தில் அம்பாளின் ஆலயம் இடித்து அழிக்கப்பட்டு சூறையாடப்பட்டது. அம்பாளின் திருவுருவம் கோவிலின் வடமேற் திசையில் நின்ற ஆலமரப் பொந்தினுள் மறைத்து வைக்கப்பட்டது. இதன்பின்னர் இவ்வாலயம் புதிதாக அமைக்கப்பட்டு காலத்திற்குக் காலம் புனருத்தாரணம் செய்யப்பட்டுள்ளது.

சக்தி வழிபாடு எமக்கு இன்றியமையாத தொன்று. இச்சக்திவழிபாட்டை மூன்றுவகையாக நடைமுறைப்படுத்தலாம். அவை மந்திர ஜெபம், ஸ்ரீசக்கரம், குண்டலினி யோக சாதனை எனவாகும். தேவி வணக்கத்திற்குரிய இம்மூவகை வழிபாடும் இத்தலத்தில் சிறப்பாக நடைபெற்றுவருகின்றது. தாயாக வழிபடும் வழக்கம் பழைமையானது. உயிர்கள் அனைத்தும் அன்னையின் உவிதயோடு வாழ்வைத் தொடங்குகின்றன. பிரபஞ்சத்தைக் காப்பவளாகவும் தீயவர்களை அழித்து நல்லவர்களை வாழச்செய்பவளாகவும், இம்மகா சக்தி விளங்குகின்றாள். தொன்மையான வழிபாட்டு நெறிக்கு உரியதான இவ்வாலயம் நயினாதீவின் வடகிழக்கே துறைமுகத்தின் முகப்பினில் விளங்குவதும் ஒரு தனிச்சிறப்புடையதாகும். அலை கடலைத் தாண்டி அம்பிகையின் அருள்வேண்டி வரும் அடியார்கள் துறைமுகத்தில் கால்வைத்ததுமே தாமதம்இன்றி அவர்களுக்கு தன் அருட்கரம் நீட்டி வருகவருகவென அருள் சுரந்து அழைக்கும் பான்மையே ஒரு அருட்காட்சியாக இருப்பதும் எம் எல்லோருக்கும் உளப்பூரிப்புடையதாகும்.

நாகபூஷணி அம்மனை வழிபட்டுவரும் அடியார்கள் சகல பாக்கியமும் பெற்று தீராத நோய் தீரப்பெற்றவர்களாகவும், சர்ப்பதோஷத்தால் பாதிக்கப்பட்டோர் பரிபூரண சாந்திபெற்றவர்களாகவும், புத்திர பாக்கியம் அற்றோர் தம்குறை இரந்து நிறைவு பெற்றவர்களாகவும், மாற்றமடையும் பிரார்த்தனை வழிபாடு இவ்வாலயத்தின் சிறப்பாகும்.

அனைத்து உயிர்களையும் உய்விப்பதற்காக அங்கிங்கெதனுபடி எங்கும் வியாபித்து பிரகாசமாய் நின்று ஏகமாய் அனேகமாய் ஆயிரம் திருநாமம் பெற்று முன்னைப் பழவினைகள் தீர்த்தருளும் அருள் சக்தியாக விளங்குகின்றாள் அன்னை நாகபூஷணி அம்மை. ★

**நல்லருள் தருவாய்**

அலைபாயும் கடல் தாண்டி
அம்பிகையின் ஆலயத்தில்
கலைமலிந்த தேர்களுடன்
கவின்றொழுகு மஞ்சமதை
நிலையில்லா மனத்தருடனே
நின்றெரித்த நீசர்களை
தொலைத்திடுவாய் தூயவளே
தொழுதிடுவோம் நின்பாதம்!
தேர்களை எரித்த அந்தத்
தீயவர் கூட்டம் இன்றே
வேரொடு அழிந்திடாதோ - எம்
வேதனை தீர்ந்திடாதோ
யாரொடு நோவோமம்மா
யார்க் கெடுத் துரைப்போமம்மா
நாரணி நாயகியே - எமக்கு
நல்லருள் தருவாய் அம்மா!

- நயினை இராகுலம் -

**சமயம்**

செல்வி. பரிமளா மதியாபரணம்

# தலைநகர்போன இளைஞன்

# கைதியான அவலக்கதை!

காலை எட்டு மணிக்கு சகல கைதிகளும் சிறைகளுக்கு வெளியில் கொண்டு வரப்பட்டார்கள். அவர்களது பெயர்கள், வழக்கு இலக்கங்கள் ஆகியன அதிகாரிகளால் சரி பார்க்கப்பட்டன.

வெளியே வரிசையாக நின்ற விளக்கமறியல் கைதிகள் கலகலப்பாக இருந்தனர். வெளியுலகைக் காணப்போகும் மகிழ்ச்சி உறவினர்களையும், நண்பர்களையும் நீதி மன்றத்தில் சந்திப்போம் என்ற நினைப்பினால் ஏற்பட்ட குதூகலம், அவர்களுக்குள்ள கவலைகளை சிறிது மறக்க வைத்தன.

விளக்கமறியல் கைதி சிறிசேன மட்டும் இதற்கு விதிவிலக்காக இருந்தான். அவன் முகத்தில் அச்சமும் கலவரமும் குடிகொண்டிருந்தன.

அவனது உடை, அவனது முகபாவம் யாவும் என் கவனத்தை ஈர்த்து அவனோடு பேசத் தூண்டின.

அவனை ஒரு பக்கமாக அழைத்து 'இன்று உன் வழக்குத் தவணையல்லவா, உன் உறவினர் சட்டத்தரணியை ஒழுங்கு படுத்தியிருப்பார்களா?' என்று கேட்டேன்.

'எனக்குச் சட்டத்தரணி தேவையில்லை' என்றான்.

'தேவையில்லையா? ஏன்'

'நான் ஒரு குற்றமும் செய்யவில்லை, எனக்கேன் சட்டத்தரணி, நான் கொழும்புக்குப் பாஸ்போர்ட் எடுக்க வந்தனான். இங்கே மாட்டிக் கொண்டேன்' என்று கூறினான்.

பாஸ்போர்ட் எடுக்கக் கொழும்புக்கு வந்த சிறிசேன பொலீசாரால் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்ட விவரத்தை அவன் கூறிய போது, ஒரு திரைப்படக் கதையைக் கேட்பதுபோல் இருந்தது.

சிறிசேனவின் கதையைக் கூறமுன், அவன் இந்தக் கதிக்கு ஆளாகக் காரணமாக இருந்த இருவரைப் பற்றிச் சொல்ல வேண்டியது அவசியமாகிறது. உண்மையான கதாநாயகர்கள் அவர்களே!

சில்வாவும் மெண்டிசும் பெரிய திணைக்களம் ஒன்றில் வேலை செய்பவர்கள். இருவரும் இணைந்து குறுக்கு வழியில் பணம் சம்பாதிப்பவர்கள். சட்டவிரோதச் செயல்கள் செய்வதில் வல்லவர்கள்.

திணைக்களத்தில் வெற்றுக் காசோலை ஒன்றைத் திருடி, ஏற்கனவே ஒரு மாதகாலமாகப் பயிற்சி செய்து வைத்திருந்தபடி கணக்காளரினதும், உதவிக் கணக்காளரினதும் கையொப்பத்தை இட்டுத் திணைக்கள முத்திரையையும் குத்தி வைத்திருந்தார்கள்.

தாங்கள் எவ்விதத்திலும் சம்பந்தப்படாது இக்காசோலையைப் பணமாக்கிக் கொடுக்கக் கூடிய நபர் ஒருவரைத் தெரிவு செய்யும் வேலை

(6 ஆம் பக்கம் பார்க்க)

வில்வம் பசுபதி

## பஞ்சாமிர்தம் பலரச அமிர்தம்

### அலுமினியப் பாத்திரப் பாவனை

அலுமினியப் பாத்திரங்களில் சமைப்பதில் கவனம் செலுத்த வேண்டும்.

தக்காளிப் பழம் போன்றவற்றை சமைக்க அலுமினியப் பாத்திரங்களைப் பயன்படுத்தக் கூடாது.

பேராசிரியர் கிர்த்தி தென்னக்கூன் மேற்கண்ட ஆலோசனையை வழங்கினார்.

சூழல்தின கருத்தரங்கு ஒன்றில் பேசுகையில் பேராசிரியர் இக்கருத்தை வெளியிட்டார்.

அலுமினியப் பாத்திரங்களைத் தூக்கி எறிய வேண்டும் என்று நான் சொல்லமாட்டேன்.

ஆனால் தேவையான கவனம் எடுத்து அவற்றில் சமைக்க வேண்டும். இதுவே நான் கூறுவது.

இப்படிக் கூறிய பேராசிரியர் கீர்த்தி தென்னக்கூன், அலுமினியப் பாத்திரங்களைப் பயன்படுத்தி சமைப்போருக்குக் கூறும் சில ஆலோசனைகள் வருமாறு;

★ கூடிய அமில, அல்லது சுண்ணாம்புச்சத்து நிறைந்த உணவைச் சமைக்கக் கூடாது. உதாரணம்: தக்காளி.

★ புளோரைட் கலந்த தண்ணீரை பாவிக்கக் கூடாது.

★ மீன் போன்ற புளோரைட் சேர்ந்த உணவை சமைப்பதைத் தவிர்க்க வேண்டும்.

★ தேனீர்தயாரிப்பதையும தவிர்க்க வேண்டும்.

★ மெட்டாலிக் (Metalic) கரண்டிகள் பாவிப்பதையும் தவிர்க்க வேண்டும். ★

### மிக அதிகமான ஜீவனாம்சம்

உலகிலேயே மிகஅதிகமாக ஜீவனாம்சம் பெற்றவர் அரபு நாட்டுக் கோடீஸ்வரர் அட்னன் காஸ் ரூஹாகியின் முன்னாள் மனைவியான சொரயாவாகும்.

இவர் தமது விவாகரத்தின் போது 140 கோடி பவுண்டு ஜீவனாம்சமாகத் தரப்பட வேண்டும் என கோரி இருந்தார். வழக்கின் முடிவில் 10 கோடி பவுண்டுகளை ஜீவனாம்சமாகப் பெற்றார். ★

### எருமை ஆராய்ச்சிக்கு ரூ. 8 கோடி

எருமை பற்றிய ஆராய்ச்சியை நடத்த இந்திய அரசு எட்டுக் கோடி ரூபாவை ஒதுக்கி உள்ளது.

இந்த ஆராய்ச்சியை பீகார் மாநிலத்தில் நடத்த ஆறு கோடி ரூபா செலவிடப்படும்.

அனைத்திந்திய ரீதியில் ஆராய்ச்சி நடத்த இரண்டு கோடி ரூபா செலவிடப்படும். ★

# செவ்வாய் தோஷ பலன்களும்

# அவை நீங்க நிவர்த்திகளும்

செவ்வாய் ஆண், பெண் ஜன்மசாதகங்களில் உதயலக்கினம், சந்திரலக்கினம்,(இராசி) வெள்ளி லக்கினம் இவற்றிற்கு 1, 2, 4, 7, 8, 12ம் இடங்களில் இருப்பின் தோஷமுடையதாகும். வேறு இடங்களில் இருந்தாலும் 2ம், 7ம், 8ம் இடங்களைத் தான் இருக்கும் இராசியிலிருந்து செவ்வாய் நோக்கினாலும் தோஷம் ஏற்படும். தான் நின்ற இராசியிலிருந்து செவ்வாய் 4ம், 7ம், 8ம் இராசிகளை நோக்குவர்.

சாதகத்தில் 02ம் வீடு குடும்பஸ்தானம் 07ம் வீடு களத்திரஸ்தானம் பெண்களுக்கு 08ம் வீடு மாங்கல்யஸ்தானம். 01ம் வீட்டிலிருந்து செவ்வாய் முன்கூறியபடி 07ம் வீட்டையும் 08ம் வீட்டையும் கடுமையாக நோக்குவர். 04ம் வீட்டிலிருக்கும் செவ்வாய் 04ம் பார்வையாக 07ம் வீட்டை நோக்குவர். 12ம் வீட்டிலிருக்கும் செவ்வாய் 08ம் பார்வையாக 07ம்வீட்டை நோக்குவர். இதனாலேயே செவ்வாய் 1, 2, 4, 7, 8ல்இருப்பதால் தோஷம் ஏற்படுகிறது.

செவ்வாய் மேற்கூறப்பட்ட1, 2, 4, 7, 8 ,12ம் இடங்களில் இருந்து அவ் விராசிகள் செவ்வாய்க்கு பகை நீசஇராசிகளாக இருப்பினும் அவ்விராசிகள் நற்கிரக பார்வை பெறுமல் இருப்பினும் குடும்ப வாழ்க்கையில் பாரதூரமான கெட்ட விளைவுகள் ஏற்படும். நற்கிரகபார்வை பெறுமல் வேறு பகை நீச இராசிகளில் (1, 2, 4, 7, 8, 12ம்இடங்களைத் தவிர்ந்த) இருந்து செவ்வாய் [illegible] 08ம் இடங்களை நோக்கினும் குடும்ப வாழ்க்கையில் பல பாதிப்புகள் ஏற்படும்.

செவ்வாய் 1, 2, 4, 7. 8, 12ம் இடங்களில் இருக்காமல் களத்திரகாரனாகிய வெள்ளியுடன் சேர்ந்திருந்தாலும் குடும்பத்தில் சந்தோசமின்மையை ஏற்படுத்தும்.

செவ்வாய்க்கு கடகம் நீசராசியாகும். சிங்கம், தனு, கும்பம், மீனம் பகை ராசிகளாகும். மேற்கூறப்பட்ட மாதிரி அமைந்த செவ்வாயினால் அநுபவரீதியாக உண்மையாக குடும்பப்பிரிவுகள் பாரதூரமான விளைவுகள் ஏற்பட்டதை ஜாதகங்களைப் பார்த்தபோது அறிந்திருக்கிறேன். செவ்வாய் சில இலக்கினங்களில் பிறந்தவர்களுக்கு கடும்பாபக் கிரகமாகவும் அமையும். அப்படியான இலக்கினத்தில் பிறந்தவர்களுக்கு செவ்வாய்தோஷம் இருப்பின் கடுமையாகப்பாதிக்கும். மிதுனம், கன்னி, துலாம், மகரம் என்ற இலக்கினங்களில் பிறந்தவர்களுக்கு செவ்வாய் கடும் பாபக் கிரகம்.

விவாகப் பொருத்தத்தில் ஆண், பெண் இருவருடைய ஜாதகமும் தோசமுடையதாயின் புத்திராதி சகல சம்பத்துக்களும் உண்டாம். பெண் ஜாதகம் தோஷமுடையதாகி ஆண் ஜாதகம் தோசமில்லாதிருப்பின் ஆணுக்குக் கெடுதி உண்டாம். அதேபோல் ஆண் ஜாதகம் தோஷமுடையதாகி பெண் ஜாதகம் தோஷமில்லாதிருப்பின் பெண்ணுக்குக் கெடுதியும் உண்டாம். செவ்வாயினால் ஏற்படும் பாபம் மற்றைய கிரகங்களின் பாபங்களால் சாந்தியாகாது. செவ்வாய்தோஷத்தால் கீழ்க்காணும் கெட்ட விளைவுகள் ஏற்படுகின்றன. இவைகள் அநுபவரீதியாகக் காணக்கூடியதாக இருக்கின்றன.

01ம் வீட்டில் தோஷம் அடைந்திருந்தால் கடும் கோபம் கடூரமனத்தாலும் கணவன் மனைவிக்கு

(6ஆம் பக்கம் பார்க்க)

**சோதிட சஞ்சீவி**

★ எஸ். சிதம்பரநாதன் ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மக்கள் மகிமை

### பண்பு பேணியவர்

கடந்த ஏழு வருட காலமாக யாழ் சுகாதாரத் திணைக்களத்தில் நிர்வாக உத்தியோகத்தராக கடமையாற்றி வரும் திரு. பொ. இராசேந்திரம் கடந்த 28ஆம் திகதி (28-05-87) அன்று தமது 39 வருட அரச சேவையிலிருந்து ஓய்வு பெறுகிருர்.

பருத்தித்துறை, புலோலி மேற்கைச் சேர்ந்த திரு. பொன்னையா இராசேந்திரம் 1948 ஆம் ஆண்டில் சுகாதார திணைக்களத்தின் எழுதுவினைஞர் சேவையில் சேர்ந்து தமது திறமையினுல் அனுராதபுரம் சுகாதாரப் பிரிவில் மேலதிக செயலாளராகவும், வவுனியா சுகாதாரப் பிரிவில் கணக்காளர் / செயலாளராகவும், அதனைத் தொடர்ந்து 1981 ஆம் ஆண்டிலிருந்து யாழ் பிரதேச சுகாதார சேவைப் பணிப்பாளர் அலுவலகத்தில் நிர்வாக உத்தியோகத்தராகவும் பணியாற்றியுள்ளார்.

கொழும்பு அரச நிர்வாக சேவைப் பயிற்சி நிலையத்தில் பயிற்சி பெற்ற திரு. இராசேந்திரம் யாழ் பிரதேச சுகாதார வைத்தியத் துறைகளின் வளர்ச்சியிலும், முன்னேற்றத்திலும் அதிக அக்கறை கொண்டவராக சேவையாற்றி வந்தார். குறிப்பாக பின்தங்கிய பகுதிகளின் வைத்தியசாலைகளை அபிவிருத்தி செய்வதிலும் தேவையான வசதிகளைச் செய்து கொடுப்பதிலும் அதிக ஆர்வம் காட்டி வந்துள்ளார். அத்துடன் கஷ்டப்பட்ட நிலையிலுள்ள திணைக்கள ஊழியர்களின் நலன்களை கவனித்து அவர்களின் தேவைகளை உடனுக்குடன் நிறைவேற்றிக் கொடுப்பதிலும் அதிக அக்கறை செலுத்தி வந்துள்ளார். சுகாதார திணைக்கள தொழிற் சங்கங்கள் சமர்ப்பிக்கும் நியாயமான கோரிக்கைகளை அனுதாபத்துடனும் நல்லெண்ணத்துடனும் ஆராய்ந்து நிறைவேற்றிக் கொடுக்கும் பணியிலும் திரு. இராசேந்திரம் ஈடுபட்டு வந்ததினுல் தொழிற்சங்கங்களின் அபிமானத்திற்கும் உரியவராஞர்.

நா. மா. கந்தசாமி ★

# மரக்கறி இனங்களைத் தாக்கும் பூச்சிகள்

## அவை தரும் நோய்களின் அறிகுறி

### அவரையைத் தாக்கும் பூச்சிகள்

(அ) ''அவரை ஈ'' அல்லது ''பயத்தை தண்டு ஈ'' ஒபியோமையா பேசியோலை (Ophiomya Phaseoli)

இவ் ஈ போஞ்சி அவரை பயத்தை, பாசிப் பயறு, துவரை, சோயா, போன்ற பல பயிர்களைத் தாக்குகின்றது.

டிப்ரறு வர்க்கத்தை சேர்ந்தது. இதன் முதிர் பூச்சி 2 - 3 மி. மீ நீளமும், சென்நிறக் கண்ணையுடைய மினுமினுப்பான கரும் ஈ. இது இலைகளின் மேற்பரப்பில் குத்தி அதனுள் வெண்மையான சிறு முட்டைகளை தனித்தனியாக இடுகின்றது. (பொதுவாக இலைகள் அல்லது வித்திலைகளின் மேற்பரப்பில் அடிப் பகுதியிலே இடப்படுகின்றன.)

இடப்பட்ட முட்டை 2 - 4 நாட்களில் பொரிக்கும். கீடம் (Maggot) வெள்ளை அல்லது பழுப்பு, நிறமுடையன. இதன் காலம் 7 - 9 நாட்கள். கன்று முதிர்ச்சியடைந்த கீடம் (Maggot) 2 - 4.5மி.மீ நீளமானது. கூண்டுப்புழுக் காலத்தை தண்டின் அடிப்பகுதியில் அல்லது சில சமயங்களில் இலைக்காம்புகளிலும், இலைநரம்புகளிலும் கழிக்கின்றன. இதன் வாழ்க்கை வட்டம் 15-20



நாட்கள் ஆகும்.

பயிரில் ஏற்படும் தாக்கம்:- பொரித்த கீடம் (Maggot) இலைப்பரம்பரை ஊடுருவி இலைக்காம்பினூடாக கோதியவாறு தண்டின் அடிப் பாகத்தை அடைகின்றது. இதனுல் இலைகள் மஞ்சள் நிறமடைந்து வாடுகின்றன., பின்னர் தாவரம் வாடி இறக்கின்றது. தாக்கப்பட்ட அடிப்பகுதியில் சிறிய வீக்கமும் வெடிப்புக்களும் காணப்படும்.

### (ஆ) காய் துளைப்பான் (பயற்றங்காய்)

மறுக்கா டெற்றியூலேலிஸ் (Maruca Testulalis) இது ஓர் அந்து முன் இறைக்கை விரிந்த நிலையில் 22மி.மீ இடைத் தூரம் உடையது. இதன் முன் இறைக்கை மங்கலான கபில நிறமுடையன. இதன் நடுப்பகுதியில் ஒளி புகக் கூடிய வெண் புள்ளிகள் காணப்படும். பின் இறக்கைகள் மென்மையானவை, ஒளி புகும் இயல்புடையன. மங்கலான கபில நிற ஓரத்தையுடையவை. அந்து இரவில் திரிந்து தனித்தனியாக பூக்களில் முட்டை இடுகின்றது. இவை 2 - 4 நாட்களில் பொரித்து மெல்லிய பச்சை நிறமுடைய குடம்பி வெளி வரும். குடம்பியின் உடல் மீது மென்மயிர்களும், வரிகளில் கபிலப் புள்ளிகளும் காணப்படும். முதிர்ந்த குடம்பி 14 மி. மீ. நீளமானது. குடம்பிப்பருவம் (Laval period) 8 - 13 நாட்கள், கூண்டுப்புழுக் காலத்தை பின்னப்பட்ட இலைகளிடையே அல்லது குப்பை கூளத்துள் கழிக்கும். இதன் காலம் 5 - 9 நாட்கள்.

**பயிரில் ஏற்படும் தாக்கம்:**

இளம் தாளைக் குருத்துப் பகுதியைத் துளைக்கும், அல்லது இலைகள் பின்னப்பட்டு அரிக்கப் படலாம் குடம்பியால். முக்கிய தாக்கம் பூ தோன்றிய பின்னர் பூக்களைத் தாக்கி பின்னர் காய்களைத் துளைக்கும். தாக்கப்பட்ட காய்களுள் துவாரம் காணப்படும். துவாரத்தின் மூலம் தள்ளப்படும்எச்சம்வெளியில் காணப்படும். அத்தோடு விதைகள் அழிக்கப்படுகின்றன.

### வெண்டிக்காய்

### பூ துளைப்பான் அல்லது பருத்திப்புழு

### ஈறியாஸ் பேபியா (Earias Fabai)

இவ்அந்து பருத்தியையும் வெண்டியையும் தாக்கும். இவ்வந்து முன் இறக்கையை விரித்து இருக்கும் நிலையில் 24 மி. மீ இடைத் தூரம் ஆகும். முன் இறக்கை மென் மஞ்சள் நிறமானது. இதன் உட்பக்கத்திலிருந்து வெளிப்புறத்தைநோக்கி விரிந்து செல்லும் பச்சை வலயம் காணப்படும், பின் இறக்கை வெண்மையானது. அதன் ஓரங்களில் சிறு மயிர்கள் காணப்படும். பெண் அந்து 0. 5 மி. மீ விட்டமுள்ள முட்டையினை தனித்தனியாக இலையின் கீழ் பக்கத்தில் அல்லது தண்டு, பூக்கள், பிஞ்சுகள் மீது இடும். இவ் முட்டைகள் 3 நாட்களில் பொரிக்கும். குடம்பி கடும் கபில நிறம். உடம்பின் மேற்பரப்பில் பழுப்பு நிற புள்ளிகளும், பக்கங்களில் மஞ்சள் பொட்டுக்களும் காணப்படும். முதிர் குடம்பி 15. மி. மீ. நீளமுடையது. குடம்பிக் காலம் 15 - 19 நாட்கள்.

கூண்டுப் புழு பருவத்தினை பழங்கள், தண்டுகள், இலைகள் போன்றவற்றின் மீது காணப்படும். வாழ்க்கை வட்டம் 26 - 31 நாட்கள்.

பயிரின் தாக்கம்:- குடம்பி இளந் தண்டு, பூக்கள், காய்களைத் துளைத்து உண்டு சேதத்தை ஏற்படுத்தும். இளம் தாவரம் வாடி இறக்கின்றன. முதிர்ந்த துவாரங்களில் தாக்கப்பட்ட கிளைகள் வாடுகின்றன. காய்கள் மீது தாவரங்களும் அதனூடாக வெளியில் தள்ளப்பட்ட எச்சமும் காணப்படும்.

- க. ப. பத்மநாதன் -

-(தொடரும்)

## அறுபது காணும் . . . . .

(3ஆம் பக்க தொடர்ச்சி) கைத் தமிழ் இலக்கியத்தில் மிகுந்த செல்வாக்குக் கொண்டவர்களிலிருந்து இன்றே எழுதத் தொடங்கும் இளம் இலக்கியவாதிவரை 'மல்லிகை'யின் பக்கங்களில் இடம் பெறுகின்றனர்' என்று கனையாழி 'மல்லிகை' பற்றியும் அதன் ஆசிரியர் பற்றியும் இவ்வாறு கூறியது. ஈழத்துத் தமிழ் இலக்கிய வளர்ச்சி பற்றி ஆராய்பவர்கள் மல்லிகையை ஒரு தரவு சஞ்சிகையாக கொள்ளாமல் தம்முடைய ஆய்வினைப் பூரணப்படுத்தமுடியாது.

**வெளியீட்டுப்பணி**

'மல்லிகை' இப்பொழுது 'மல்லிகைப்பந்தல்' ஆகிவிட்டது. ஜீவா இட்ட உரமும் பாய்ச்சிய நீருந்தான் இப்படி யாக்கிவிட்டுள்ளது. பல கிளைகள் அப்பந்தலிலே இப்பொழுது தோன்றிப் பூத்துக் குலுங்குகின்றன. ஜீவாவினுடைய முயற்சியினுலே 'மல்லிகைப் பந்தல்' அனுசரணையில் தற்பொழுது பல இலக்கிய ஆக்கங்கள் வெளிவந்து கொண்டிருக்கின்றன.

ஜீவா ஈழத்திலிருந்து பல நாடுகளுக்குக் கேட்கும் ஓர் இலக்கியக்குரல். அண்மையில் (1982) அக்குரலைப் பதிவு செய்து 'ஈழத்திலிருந்து ஓர் இலக்கியக் குரல்' என்னும் நூலாக நர்மதாப் பதிப்பகத்தினர் வெளியிட்டனர். தமிழ் நாட்டுக்குப் போகின்ற காலமெல்லாம் அங்கே கேட்ட குரல் வெறும் ஜீவாவின் குரல் அல்ல. எங்கள் நாட்டின் இலக்கியக் குரலாகவே அது ஒலித்துள்ளது. தமிழகத்திலிருந்து வரும் 'ஜீவா' என்னும் சஞ்சிகை 1979 ஆம் ஆண்டு தமிழ்நாடு கலை இலக்கியப் பெருமன்றத்தின் கோவைக் கிளை 'மல்லிகை' ஜீவாவுக்கு வரவேற்பளித்த போது, அங்கு நிகழ்த்திய சொற்பொழிவினைப் பிரசுரித்தது. அதில் ஜீவா கூறிய ஒரு கருத்து 'என்னைச் சிறந்த எழுத்தாளன் என்று கூறினீர்கள். அது காதில் பூ வைப்பது போன்றதாகும். என்னை விடத் திறமையாக இலக்கியங்களைப் படைக்கும் எழுத்தாளர்கள் ஈழத்தில் நிறையப்பேர் இருக்கிருர்கள். இதைக் கூறுகின்ற மனவலிமை எனக்கு இருக்கிறது. இவ்வாறு கூறுவதில் பெருமையும் அடைகிறேன். இது வளர்ச்சியைக் குறிக்கும். ஆனுல் இங்குள்ளவர்களுக்கு இந்த மனவலிமை கிடையாது. இங்கு ஒவ்வொருவரும் பெரிய எழுத்தாளராக எண்ணிக் கொண்டிருக்கிருர்கள்' இவ்வாறு தன்னுடைய நாட்டு இலக்கியம், இலக்கிய ஆசிரியர்கள் ஆகியோரின் குரலாக ஜீவா மல்லிகை மூலமாகவும், தன்னுடைய சொந்தக் குரல் மூலமாகவும் ஒலித்து வந்துள்ளார்.

இதுவரை குறிப்பிட்ட சில தகைமைகள் சில ஜீவாவின் மணிவிழா ஆண்டினை இலக்கிய ஆர்வலர்கள் நினைவு கூரும்படி வைத்துள்ளன. இலக்கிய நண்பர்களை நேசிக்கும் ஜீவாவின் பண்பினையும் அவருடைய மானட நேயத்தினையும் நாம் மறந்துவிடலாகாது. மணிவிழாக் கொண்டாடக் கூடிய சூழ்நிலையல்ல இது. எனினும் இக்கஷ்டத்துக்குள்ளும் ஜீவாவின் மணிவிழா ஆண்டினை மானசீகமாக நினைக்கின்றோம்; அவர் இலக்கியசேவை தொடர்ந்து பல்கிப் பெருக எம்முடைய வாழ்த்துக்களையாவது இந்நேரத்தில் வழங்குவது பொருத்தமாகும். ★

## பரலோக. ..

(3ஆம் பக்க தொடர்ச்சி) என்றுகூறி கிறீஸ்துவால் அழைக்கப்பட்டார்.

ஆரம்பத்தில் புனித சின்னப்பர் எவ்வளவுக்கு எவ்வளவு கிறீஸ்தவர்களைத் துன்புறுத்தினுரோ அவ்வளவிற்கு அவ்வளவு திருச்சபையின் அங்கத்துவத்தை அதிகரிக்கும் ஆசானுக, புறவினத்தார்க்கு கிறீஸ்துவை அறிவிக்கும் விற்பன்னராக மாறினுர்,

மன்றங்களின் முன் குற்றவாளிக் கூண்டில் நிறுத்தப்பட்டார், கசை அடிகளுக்கும், சிறைத் தண்டனைகளுக்கும் உட்படுத்தப்பட்டார்.

எனவே கிறீஸ்துவின் தத்துவங்களை உலகறியச் செய்வதில், திருமறையைப் பரப்புவதால், பலரைப் பரலோக பாதைக்கு இட்டுச் செல்வதில் இவ்விரு புனிதர்களும் பெரும் பங்கு ஏற்றனர் என்பதில் எள்ளளவும் ஐயமில்லை.

இவ்விருவரின் திட நெஞ்சும். ஆழ்ந்த மதப் பற்றும், அதற்கான தியாகவாழ்வும் எமக்கு முன்மாதிரியாக அமையட்டும். ★

# உதைபந்தாட்ட வீரர் பேலே

## விளையாட்டுத் துறை

பல ஆண்டுகளுக்கு முன்... ஒரு விறுவிறுப்பான உதைபந்தாட்டப் போட்டி ஒன்று நடைபெற்றுக்கொண்டு இருக்கிறது.

போட்டியில் கலந்து கொண்ட இரு அணிகளும் ரசிகர்களின் ஆரவாரத்தின் மத்தியில் வெற்றிக்காகப் பாடுபடுகின்றன. போட்டி முடிவடையும் தருணத்தில் ஓரணிக்கு பனுல்டி உதை ஒன்று கிடைக்கின்றது. மிகுந்த எதிர்பார்ப்புடன் அணியின் தலைவர் அந்த பனுல்டி உதையைக் கோலாக மாற்ற வருகிருர்.

நடுவரின் உத்தரவு விசில் கேட்டதும் அணித் தலைவர் பந்தை கோலை நோக்கி உதைக்கிருர். எதிரணி கோல்காப்பாளரினுல் பந்தை தடுத்து நிறுத்தமுடியவில்லை. அவரைத் தாண்டிய பந்து கோலாக மாருமல் கோல் கம்பத்தின் விளிம்பில் பட்டுத் திரும்பிவருகிறது.

பனுல்டி உதையை மேற்கொண்ட அணித் தலைவர் திகைத்து நிற்கிருர். உடனடியாக நடுவரிடம் கோல் கம்பத்தின் தூரம் சம்பந்தமான தனது ஆட்சேபத்தைத் தெரிவிக்கின்ருர். ஆட்டம் இடைநிறுத்தப்படுகிறது. கோல் கம்பங்களின் அளவுகள் தூரங்கள் அளக்கப்படுகின்றன. அவை நாட்டப்பட்ட தூரங்களில் பிழை இருப்பது கண்டுபிடிக்கப்படுகிறது.

இவ்வாறு அளவுகோல் எதுவும் இல்லாமல் தன்னுடைய பந்தை உதைக்கும் திறமையால் கோல் கம்பங்களின் தூரவித்தியாசத்தைக் கண்டுபிடித்தவர்தான் எட்சன் அரண்டீஸ் டூ நச்சிமென்டோ.

என்ன நாம் கேள்விப்படாத பெயராக இருக்கிறது என யோசிக்கிறீர்களா? அவர்தான் உலக அரங்கில் உதைபந்தாட்டத்தில் பிரேசிலுக்கென தனி இடத்தைப்பிடித்து கொடுத்த பேலே.

1958 ஆம் ஆண்டு உலக கிண்ணப்போட்டியில் ஆட ஆரம்பித்த பேலே 1977 ஆம் ஆண்டு ஓய்வுபெற்ருர். இதற்கிடையில் 1363 முதல்தர உதைபந்தாட்ட போட்டிகளில் ஆடினுர். இவற்றுள் 111 போட்டிகள் சர்வதேச ஆட்டங்களாகும். இந்த கால இடைவெளியில் இவர் போட்ட கோல்களின் எண்ணிக்கை 1,300

உதைபந்தாட்டத்தில் இருந்து ஓய்வுபெற்ற பின் இவர் பிரேசிலின் உலக நாடுகளான உத்தியோகபற்றற்ற தூதராக இருந்துவருகிருர்.

வெளிநாடுகளின் மத்தியில் தன்னுடைய நாட்டின் மதிப்பை உயர்த்துவதை குறிக்கோளாகக்கொண்ட இவர் நற்பண்புகளால் உலக தலைவர்கள் மத்தியில் மிஸ்டர் கிளீன் இமேஜை உருவாக்கியுள்ளார்.

மிகுந்த நாட்டுப்பற்றும், நற்பண்புகளும் கொண்ட இவர் அரசியலில் நாட்டம் உடையவர். இவர் தீவிரமாக அரசியலில் ஈடுபடுவாரானுல் பிரேசிலின் ஜனுதிபதியாக மாறும் அளவுக்கு மக்கள் ஆதரவு இவர்பக்கம் உண்டு.

- ஈசன் -

### கிரிக்கெட்

ஆஸ்திரேலியா அணி இவ்வாண்டு ஆகஸ்ட் மாதம் இலங்கையில் டெஸ்ட் போட்டிகளில் கலந்து கொள்வவற்கு வரஇருந்தது. பின்னர் நாட்டு நிலைமை காரணமாக ஆஸ்திரேலியாவின் வருகை ஊர்ஜிதம் செய்யப்படாமல் இருந்துவந்தது. தற்போது இலங்கை கிரிக்கெட் கட்டுப்பாட்டுசபைஆஸ்திரேலியாவின் வருகையை உறுதிசெய்துள்ளது.

கடந்த ஏப்ரலில் மூன்று டெஸ்ட் போட்டிகளில் ஆடவந்த நியூசிலாந்து அணி ஒரு போட்டியுடனேயே மூட்டைகட்டியது. ஆஸ்திரேலியா எத்தனை போட்டிகளில் ஆடும் என்பதை பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும். ★

## செவ்வாய் தோஷ பலன்கள்...

(5ஆம் பக்க தொடர்ச்சி) சந்தோசமில்லாத குடும்ப வாழ்க்கை அமையும்.

02ம் வீட்டில் தோசம் அடைந்திருந்தால் விவாகம் செய்யும்போது நீடிய தாமதம், பிணக்குகள் ஏற்படுதல், விவாகத்திற்குப் பின்பு அடிக்கடி குடும்பப்பிரச்சினை ஏற்படுதல், சுகவீனங்கள் ஏற்படுதல், வேறு கெட்ட ஆண், பெண்களின் சேர்க்கை கணவர், மனைவி விவாகம் செய்து சொற்பகாலத்தில் இழப்பு போன்றவை ஏற்படும்.

04ம் வீடு தோசம் அடைந்திருந்தால் கணவர், மனைவி இடத்தில் போகசுகம் குறைவாக விருக்கும்.

07ம்வீடு தோசமடைந்தால் விவாகம் செய்வதற்கு நீடிய தாமதம், குடும்பப்பிரிவு, கணவர், மனைவி இழப்பு கணவர், மனைவி இடத்தில் சண்டை சச்சரவுகள், இரண்டு தாரம் செய்தல் போன்றவை நிகழும்.

08ம் வீடு பெண்களுக்கு மாங்கல்யஸ்தானம்.

08ம்வீடு தோசமடைந்தால் விவாகம் நிச்சயப்படுத்தியும் நடைபெருமல் போகும் கால நீடிப்புக்களும் கணவர் மனைவி பகையும் கணவர் அல்லது மனைவி ஆயுளுக்கும் ஆபத்தும் ஏற்படலாம். 12ம் வீடு தோசமடைந்தால் விவாகம் நடைபெருதிருத்தல் அல்லது களத்திரசுசுகவீனங்கள் ஏற்படும்.

செவ்வாய்தோசத்தால் ஏற்படும் இக் கெட்ட விளைவுகள் ஏற்படாமல் எப்படி நிவிர்த்தியடைகின்றன என்பதைக் கவனிப்போம்.

செவ்வாய் முன்கூறப்பட்டபடி 1, 2, 4, 7, 8, 12ம் இடங்களில் தோசம் அடைந்திருந்து நற்கிரக பார்வை (குறிப்பாக வியாழனின் பார்வை) பெற்றிருந்தால் குடும்ப பாதிப்புக்கள் அதிகம் ஏற்படாது. செவ்வாய் தோசம் அடைந்த இராசிகளில் நற்கிரகங்களுடன் சேர்ந்திருந்தாலும் அதிக பாதிப்புக்கள் ஏற்படாது. சில இலக்கினங்களில் பிறந்தவர்களுக்கு செவ்வாய்யோககாரனுக இருப்பதால் அவர்களுக்கு செவ்வாய் தோஷத்தால் அதிக பாதிப்பு இல்லை எனலாம். குறிப்பாக கடகம் சிங்கம், தனு, கும்பம், மீனம் என்ற இலக்கினங்களில் பிறந்தவர்களுக்கு செவ்வாய் யோககாரன் தோஷம் அடையும் செவ்வாய் 1,2,4,7,8,12ஆம் இடங்கள் மகராசியாக இருப்பதால் அதில் செவ்வாய் உச்சம் பெறுவதால் குடும்ப பாதிப்புக்கள் அதிகம் ஏற்படாது. செவ்வாய் தனது நட்பு ஆட்சிபெறும் இராசிகளில் இருந்தாலும் நீசபங்கராசயோகம் பெற்ருலும் அதிகம் பாதிக்காது. அவைகள் 1,2,4, 7,8,12ஆம் வீடுகளாயிருப்பினும் செவ்வாய் கேந்திரங்களில் (1,4,7, 10ஆம் இடங்களில்) ஆட்சி, உச்சம் பெற்றிருந்தால் உருச்சகயோகம் அடைகிறது. அப்படி உருச்சகயோகம் பெற்று 1,4,7ஆம் வீட்டில் இருந்தால் குடும்பத்தில் பாதிப்புக்கள் ஏற்படாது. அத்துடன் யோககாரனுகவுமிருந்தால் கூடுதலான நன்மைகள் குடும்பத்தில் ஏற்படும். நவாம்சத்தில் வர்க்கோத்தமம் பெற்ருலும் (கிரகநிலையிலும் நவாம்சத்திலும் ஒரே ராசியிலிருப்பது) செவ்வாய் தோஷத்தால் ஏற்படும் விளைவுகள் குறைவாகவிருக்கும்.

ஜாதகத்தில் கிரக அமைப்புக்களால் ஏற்படும்செவ்வாய் தோஷம் நீங்கப் பெருதவர்கள் செவ்வாய்க்கிழமைகளில் விரதம் அனுஷ்டித்து முருகப்பெருமானுக்கு விசேடபூஜை, ஆராதனை வழிபாடு செய்தால், செவ்வாய் கிரகபிரீதியும் செய்தால், கெட்ட விளைவுகள் குறையும். தாமதப்படும் விவாகமும் நடைபெறும். செவ்வாய்க்கிழமைகளில் துர்க்கை அம்மனின் வழிபாடு செய்துவந்தாலும் செவ்வாய் தோஷத்தால் ஏற்படும் பாதிப்புக்கள் குறையும். ★

## தலைநகர் போன...

(5ம்பக்கத் தொடர்ச்சி) யில் இறங்கிஞர்கள்.

மாத்தறையில் இருந்து புறப்பட்ட றுகுணு குமாரி காலை பத்து மணிக்குக் கோட்டை ரெயில் நிலையத்தை வந்தடைந்தது. ரெயில் நிலையத்தை விட்டு வெளியே வந்த சிறிசேன வெளிப்படிக்கட்டில் இருந்து ரோட்டை நோட்டம் விட்டான். மெதுவாக ஊர்வலம் போல் செல்லும் நூற்றுக்கணக்கான கார்களையும் பஸ்களையும் கண்டு பிரமித்து நின்று வேடிக்கை பார்த்தான். பின்பு ரோட்டில் இறங்கி மேலே நிமிர்ந்து 'கோட்டைப் புகையிரத நிலையம்' என சிங்களத்தில் எழுதப்பட்டதைப் படித்தான். இவன்தான் நாம் தேடும் நபர் என்று சில்வாவும் மென்டிசும் முடிவு கட்டினர்.

வாகன ஊர்வலத்தைப் பார்த்து ரசித்த சிறிசேன கோட்டை ரெயில் நிலையத்திற்கு முன்னுல் இடது பக்கத்தில் ஐஸ்பழ வண்டியை நெருங்கினுன். ஐம்பது ரூபா நோட்டைக் கொடுத்து விட்டு ஐஸ்பழம் வாங்கிச் சாப்பிட்டான். மிகுதிப் பணத்தை அவன் கேட்டபோது ஐஸ்பழக்காரன் இரண்டு ரூபா கொடுத்தான். தான் ஐம்பது ரூபா கொடுத்ததாக சிறிசேன ஞாபகப் படுத்தினுன். ஐஸ்பழக்காரன் சினங்கொண்டு ஏசினுன். ஐந்து ரூபா தான் சிறிசேன கொடுத்ததாகவும், உடனே இடத்தைக் காலிபண்ண வேண்டும் என்றும் ஏசினுன்.

இவற்றையெல்லாம் கவனித்துக் கொண்டிருந்த சில்வாவும் மென்டிசும் உடனே ஐஸ்கிரீம் விற்பவனைப் பயமுறுத்தி மிகுதிப் பணத்தை வாங்கிக் கொடுத்தனர். அதன்பின் மூவரும் ஒன்ருகச் சாப்பிட்டார்கள். சில்வாவே பணம் கொடுத்தான். சிறிசேன தான் பாஸ்போர்ட் எடுக்கக் கொழும்பு வந்ததாகச் சொன்னுன்.

பாஸ்போர்ட் சம்பந்தமான சகல அலுவல்களும் தாங்கள் முடிப்பதாகக் கூறினுர்கள். அதற்கு முன் காசோலை ஒன்று மாற்ற வேண்டும் என்று கூறிய சில்வா, தனது சட்டைப்பையைத் தடவிப் பார்த்து அடையாள அட்டை கொண்டுவர மறந்து விட்டதாகக் கூறினுன். அப்போது மென்டிஸ் சிறிசேனவின் பெயருக்கே காசோலை எழுதி அவனுடைய அடையாள அட்டையுடன் மாற்ற யோசனை கூறினுன்.

காசோலையில் சிறிசேனவின் பெயர் எழுதப்பட்டது, சிறிசேனவிற்குப் பெருமையாகவும் மகிழ்ச்சியாகவும் இருந்தது. தன்மீது இவ்வளவு மதிப்பும் நம்பிக்கையும் வைத்திருக்கிருர்களே என எண்ணிப் பூரித்தான்.

கொழும்பு புறக் கோட்டையில் உள்ள கடை ஒன்றில் காசோலை மாற்றப்பட்டது. கொமிசனுக ஐயாயிரம் ரூபா முதலாளிக்குக் கொடுக்கப்பட்டது. நாற்பதுனுயிரம் ரூபாவைக் கொடுத்த முதலாளி மிகுதி ஐயாயிரம் ஒரு மணித்தியாலத்தில் தருவதாகக் கூறினுர்.

சிறிசேனுவைக் கடையில் நிற்கவைத்துவிட்டு கச்சேரிக்குப் பணத்தைக் கட்டிவிட்டு வருவதாகக் கூறிச் சென்ற சில்வாவும் மென்டிசும் தலைமறைவாகி விட்டனர்.

சிறிசேன கடையில் நண்பர்களுக்காகக் காத்து நின்ருன். கடை முதலாளி அவர்களைப் பற்றி விசாரித்தபோது தான் சிறிசேனவிடமும், அவன் நண்பர்களிடமும் தான் மாற்றிக்கொடுத்த காசோலை மீதும் சந்தேகம் வந்தது. அவனுக்குத் தெரியாமல் பொலீசை வரவழைத்தார்.

சிறிசேன மாட்டிக் கொண்டான்.

காசோலை சிறிசேனவின் பெயருக்கு எழுதப்பட்டிருந்தது. பின்புறத்தில் அவனுடைய கையெழுத்து இருந்தது.

இவை யாவும் அவன் கைது செய்யப்பட்டு, விளக்கமறியலில் வைப்பதற்குப் போதுமான ஆதாரங்களாக அமைந்தன. ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொது மன்னிப்புச் சபை அது தோன்றிய வரலாறு

Amnesty International என்றால் என்ன? அது என்ன செய்கிறது? நேர்மைக்கு நாள்தோறும் சோதனை தந்து கொண்டிருக்கும் உலகம் இது. இதன் நடுவேயும், சோதனைகளைக் கண்டு கலங்காமல் மனச்சாட்சியின் குரல் ஒலிப்பவர்களும், குற்றமேதும் இழைக்காமல் கொண்ட கொள்கையில் உறுதியாய் இருப்பவர்களும் இன்னமும் வாழத்தான் செய்கிறார்கள்.

இவர்களது கருத்துச் சுதந்திரம் - கொள்கைகளுக்காகத் தண்டனை வழங்குவதில் ஆளும் வர்க்கத்தினர் எப்போதும் முனைப்பாக இருப்பது வாடிக்கை. வேறு காரணங்களின்றி கொள்கைகளுக்காகவே இவ்வாறு வெஞ்சிறையேற்பவர்களை மனச்சாட்சியின் கைதிகள் (Prisoners of Conscience) என்று சொல்லலாம்.

> உலகெங்கும் உள்ள மனித உரிமைகளை நேசிக்கின்றவர்களுக்கு காவல் தெய்வமாக இருப்பது. Amnesty International என்கின்ற அமைப்பாகும். அது பற்றிய விபரங்களை இந்தக் சட்டுரை விளக்குகிறது.

இத்தகைய மனச்சாட்சியின் கைதிகளின் விடுதலைக்காகப் பிரதிபலனை எதிர்பாராமல் வெற்றி தோல்விகளை எண்ணிக் கலங்காமல் வரிந்து கட்டிக் கொண்டு புறப்படுகிறது. ஒரு சர்வதேச சபை அதுவே Amnesty International என்கின்ற பொது மன்னிப்புச் சபையாகும். இதன் தோற்றத்திற்குப் பின்னால் ஒரு கதை உண்டு.

லண்டன் நகரைச் சேர்ந்த பீட்டர் பெனன்சன் ஒரு வழக்கறிஞர். இரு மாணவர்கள் சிறைத்தண்டனை பெற்ற செய்தியொன்றை 1961 ஆம் வருடத் துவக்கத்தில் அவர் பத்திரிகைகளில் படிக்க நேர்ந்தது.

விவரம் இதுதான்.

ஜர்கென் விச்சர்ட் என்ற 18 வயது இளைஞனும் சக நண்பர்களும் டென்மார்க்கிலுள்ள பான்ஹோம் தீவுக்கு உல்லாசப்பயணம் சென்றனர். வழியில்தான் தெரிந்தது கிழக்கு ஜெர்மனியிலுள்ள ருகன் தீவுக்குக் கப்பல் சென்று கொண்டிருக்கிறது என்பது. திடுக்கிட்ட விச்சர்ட் கப்பல் காப்டனிடம் முறையிட்டான். காப்டனுக்குக் கோபம் வரவே அனைவரையும் கைது செய்யும்படி உத்தரவு பிறந்தது. தொடர்ந்து விசாரணையின்போது கிழக்கு ஜெர்மனியில் இருந்து தப்பியோட முனைந்ததாக பொய்க் குற்றச்சாட்டு. முடிவில் ஏழாண்டு சிறைத்தண்டனை.

இந்தச் செய்தி பீட்டர் பெனன்சனை மிகவும் பாதித்தது. அப்பாவி இளைஞர்களுக்கு விடுதலை பெற்றுத் தந்தாக வேண்டும் என்று துடித்தார். தனது நண்பர் எரிக் பேக்சர் என்பவரோடு விவாதித்தார். சில விதிமுறைகள் வரையறுக்கப்பட்டு லண்டனில் ஓர் அமைப்பு உருவாகியது. இது குறித்து 'மறக்கப்பட்ட கைதிகள்' என்ற தலைப்பில் ஒரு கட்டுரையை எழுதி 'த் அப்சர்வர்' பத்திரிகைக்கு அனுப்பினார். அவரது முயற்சிக்கு ஆதரவு தெரிவித்து கடிதங்கள் குவிந்தன. இரு மாதங்கள் கழிந்து பிரிட்டன், அயர்லாந்து, பிரான்ஸ், பெல்ஜியம், ஜெர்மனி ஆகிய நாடுகளைச் சார்ந்த ஆதரவாளர்களின் கூட்டம் லக்சம்பர்க் நகரில் கூடி 1961 மே மாதத்தில் Amnesty International அமைப்பை உருவாக்கினர். பீட்டர் பெனன்சன் அதன் தலைவராகப் பொறுப்பேற்றார். பொது மன்னிப்புச்சபையின் தளர்வில்லாத முயற்சியின் பின்னர் ஜர்கென்விச்சர்ட் அவரது நண்பர்கள் ஆகியோரை கிழக்கு ஜேர்மனி அரசு விடுதலை செய்ய முன் வந்தது.

பொதுமன்னிப்புச்சபை சர்வதேச நோக்கில் பணியாற்றும் ஒரு நிறுவனம். இதுநாடு, இனம், மொழி, மதம், அரசியல் என்ற குறுகிய வேலிகளைத் தாண்டி நிற்பது. காரணமின்றித் தண்டனை பெற்ற எந்த நாட்டவனும் பொதுமன்னிப்புச் சபையை அணுகி உதவி கோரலாம். இதன் தலைமையகத்தில் இதுவரைக்கும் உதவி கோரிவந்துள்ள விண்ணப்பங்கள் 3500க்கு மேலே. இவற்றில் 1360 அரசியல் கைதிகளின் விடுதலைக்காகச் சபை போராடி இருக்கிறது. 330பேருக்கு விடுதலை பெற்றுத் தந்திருக்கிறது.

அதிகார வர்க்கத்தின் ஆணிவேர்களை அசைத்து மனசாட்சிக் கைதிகளை வெளியில் கொண்டுவருவது என்பது அப்படியொன்றும் இலகுவானதல்ல. இதற்கு திட்டமிட்ட விரிவான செயல் திறன் தேவை. பொது மன்னிப்புச் சபையும் தனது நிலையினை வலுவாக்கிக்கொள்ள உலகப் முழுவதும் விழுதுகளை ஊன்றியிருக்கின்றது.

தலைமையகத்திற்கு உதவ நாடுகள் தோறும் ஆதரவாளர் குழுக்கள் உண்டு. இவற்றில் தொழிலதிபர்கள் மாணவர்கள், மதகுருமார்கள், வியாபாரிகள், இல்லத்தரசிகள் என்று பல்வேறு திறத்தினர் அங்கம் வகிக்கின்றனர். இவர்களது எண்ணிக்கை 3 முதல் 70 வரை இருக்கும். மேற்கு ஐரோப்பா, ஆஸ்திரேலியா, வட அமெரிக்கா ஆகியவற்றில் மட்டும் உள்ள ஆதரவாளர் குழுக்களின் எண்ணிக்கை 350.

தலைமையகத்தில் பாதுகாக்கப்படும் பைல் ஒன்றில் அரசியல் கைதிகளைப்பற்றிய விவரங்கள் அனைத்து அடக்கம். வெளிநாட்டு வானொலி நிலையங்களின் செய்தி ஒலிபரப்பிலிருந்து அரசியல் கைதிகள் கைதாவது தண்டனை பெறுவது போன்ற முக்கிய தகவல்களை தலைமையகம் சேகரிக்கிறது. இதுதவிர கைதிகளின்சொந்த நாடுகள், வெளிநாட்டு நிருபர்கள், சுற்றுப் பயணம் மேற்கொள்ளும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஆகியோரிடமும் தொடர்புகொண்டு விவரங்களைத் திரட்டுகிறது.

-எம். ஜே. ரெகோ-

—நன்றி—முத்தாரம் ★

# எலிகள் பிடித்துச் சாப்பிட்ட பூனை!

“பாதுகாப்புப் படையினருக்கும் பயங்கரவாதிகளுக்குமிடையில் நடைபெற்ற நேரடி மோதலில் ஐம்பது பயங்கரவாதிகள் கொல்லப்பட்டனர்......”

லங்கா புவத்தை ஆதாரம் காட்டி இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் அதிகாலைச் செய்தியை ஒலித்துக் கொண்டிருந்த நேரம்!

“இந்த வீட்டிலை ஒரு சாமானும்வைச்சு எடுக்க ஏலாமல் இருக்கு......... இந்த எலிகளைத் தொலைக்க கெதியாய் ஒரு வழியைப்பாருங்கோ......”

என் அடிசிற்கினியாள் அகப்பையுடன் அடுப்படி வாசலில் நின்று அலறிய சத்தம் ...... இலங்கை வானொலிச் செய்தியையும் மீறிப் பாய்ந்து வந்து என்காதில்விழுந்து கரைந்து கொண்டிருந்தது!

“என்ன,..நான் சொல்லிக்கொண்டே இருக்கிறேன் நீங்கள் யோசிச்சுக்கொண்டிருக்கிறியள்? இண்டைக்கும்வேலைக்குப் போகாமல் ஏதாவது எழுதிக் கொண்டிருக்கிறதிட்டமோ......? உது எந்த நாளும் கேட்கிற கோதாரிச் செய்திதானே....”

—என ஆவேசமாக எட்டிப்பாய்ந்து வானொலியின் வாயை படக்கெனப் பொத்தினாள்!

“பார்த்தியளே! இராத்திரி திரிவிப்போட்டு வைச்ச தேங்காய்ப்பாதி வெறும் சிரட்டையாய்க் கிடக்கு......”

—வீடியோப் படத்தில் விளம்பரம் காட்டுவதைப் போல சிரட்டையை என்முகத்துக்கு நேரே பிடித்துக்கொண்டு நின்றாள்.

“கெதியாய் இந்த எலியளைத் துலைக்க வழியைப் பாருங்கோ......இல்லாவிட்டால் வீட்டையே கொளுத்திச் காம்பராக்கி விடுவேன்...”என்றாள்.

வெறும் சிரட்டையை தலைக்குமேல் தூக்கிப் பிடித்தபடி. என்ன இவள்...—எலிகளைத் தொலைக்க வீட்டையே கொளுத்துவதா......?எங்கடை மாருட்டம் பிடித்த பெரியவர் செய்தது போலச் செய்து போடுவாளோ ...... சொன்னதைச் செயலிலும் காட்டத் தயங்காத பிறவி இவள்!

இந்த எலிகளின் சேட்டை ஆகக் கூடித்தான்விட்டது கொஞ்சம் உள்ளேவிட்டால்காணும் அவையின்ரை நாட்டாண்மை.

எலிகளை எப்படித் தொலைத்துக் கட்டுவது? என ஒருவரிடம் கேட்டேன்.

—“அதற்குத்தானே கடைகடையாக எலிப் பாஷாணம் விற்கிறார்கள் வாங்கித் தெளிப்பது தானே ...”என்று சொன்னபோது...அந்தக் கணமே ஓடிச் சென்று... பாஷாணமும் கையுமாக வந்து ... வாளி நிறையக் கரைத்து பாஷாணத்தால் வீட்டையே முழுக வார்த்தேன்.

மறுநாள் பார்த்தால்...

இன்னும் அதிகமான எலிகள் எங்கள் வீட்டு எலிகளுடன்ஓடிப்பிடித்து எங்கள் முகட்டுக்குள் சலசலத்துக் கொண்டிருந்தன! ஒரு எலியாவது விழுந்து சாவதைக் காணும்...

அந்த நேரம் தான் அடுத்த வீட்டு அஞ்சலா அன்ரி வந்து சொன்ன செய்தி...

**நகைச்சுவை**

'என்ன புதினம் பாத்திரே தம்பி... இவ்வளவு நாளும் எங்கள் வீட்டிற்குள் விரிட்டுக் கொண்டு விழுந்து எழும்பி ஓடும் எலியள் ஒண்டையும் திடீரென்று காணேல்லை ... என்ன ஆச்சரியம் பாத்தீரே...'— என நாடியில் கை வைத்தாள்!

சே! இந்த எலிப்பாஷாணம் முழுவதையும் நான் அன்ரி வீடு முழுவதும் தெளித்திருக்க வேண்டும்... நான் செய்த தவறு! எனத் தலையில் அடித்துக் கொண்டேன்.

எலிகள் வீடுகளில் செய்யும் லீலைகள் பற்றி எவராவது சொல்லத் தான் கேட்டிருக்கிறேன்.

எனக்குத் திருமணம் ஆனபின் எந்த வீட்டுப் பிராணியுமே எங்கள் வீட்டில் நிலைத்து வாழ்ந்தது கிடையாது. அடுத்த வீட்டு நாய்-கோழி-ஆடு மாடுகள் எங்கள் வீட்டுப் பக்கம் எட்டியும் பார்க்காது.

எங்கள் வீட்டு வேலியைத் தாண்டி ஒரு பிராணியாவது கால் வைக்காது. எங்கள் வீட்டு எல்லைக்குள் கால் வைப்பதற்கு அப்படி ஒரு திகில்!

மேற்கூறிய வீட்டுப் பிராணிகளில் ஏதாவது ஒன்று தலைகாட்டினால் போதும்... ஆமி புறப்பட்டு விட்டது என்று கேள்விப்பட்ட போராளிகளைப்போல உஷாராகி ... என் படிதாண்டாப் பத்தினி பத்திரகாளியாகவே மாறிவிடுவாள்.

'சனியன்களே...! மூதேவியளே...! ஓடுங்கோ...!' என ரொக்கட் லோஞ்சரைத் தட்டிவிடுவதைப்போல கையில் கிடைத்த ஏதாவது ஒன்றைத் தூக்கி அவைகளை நோக்கி ஏவி விடுவாள். அது உலக்கையாகவும் இருக்கலாம். உரலாகவும் இருக்கலாம்.

அப்போது ஷெல்லடியில் சிக்குண்ட அப்பாவிகளாக அவைகளின் கால்களோ... மண்டைகளோ ... உடைபட்டு, முறிபட்டு உயிர்களைக் கால்களில் பிடித்தபடி சிதறி ஓடித் தப்பிவிடும்.

இவைகளைத் தொலைக்க நான் மொஸாட் இஸ்ரேலியரின் துணையை நாட முடியுமா? இந்த எலிகளினால் என் மூளை ஹெலியின் காற்றாடியை விட வேகமாகச் சுழன்றது!

'அட, மடையா! பூனை எலியைப் பிடிக்கும் என நீ சின்ன வயதில் படித்ததில்லையா?.......... உடனடியாக ஒரு பூனையை வாங்கி விடு. பூனையின் உறுமல் கேட்டாலே போதும் அவைகள் உயிரை முன்னே தள்ளியபடி எங்காவது ஓடித் தப்பிவிடும்'

நான் அபிப்பிராயம் கேட்ட நபர் என் மரமண்டை உறைக்கும் வண்ணம் இப்படி ஒரு யோசனையைச் சொல்லி வைத்தார்.

அன்றைய தினமே பூனைக்குட்டி ஒன்றை எடுத்து வந்து மனைவியின் அனுமதியுடன் எங்களில் ஒருவராகச் சேர்த்துக் கொண்டோம்.

அதைக் கட்டி வைத்து தினமும் பால், முட்டை, மாமிசத்துண்டுகள் [illegible] ஊட்டி ஊட்டி பூனைக் குட்டியை ஒரு பன்றிக் குட்டியாக மாற்றிவிட்டேன்.

இப்போது எலிகளைப் பிடிக்கும் பக்குவ லைய அது அடைந்து விட்டது. ஒரு நல்ல நாளாகப் பார்த்து அதன் கட்டுகளை அவிழ்த்து விட்டேன்.

அந்தக் கணம்! எலிகளை நோக்கி ஒரே தாவலாக அது முகட்டைப் பிய்த்தது! நானும் மனைவியும் ஓடி வந்து முற்றத்தில் நின்று கொண்டோம். - சிறிது நேர சரசரப்பின் பின்... மியாவ்! மியாவ்! என்ற அலறல்! குறைந்தது ஒரு எட்டுப் பத்து எலிகளையாவது அது கடித்துக் குதறி இருக்கும்!

மனைவி கை தட்டிச் சிரித்துக் கொண்டாள். எனக்கு ஒரே ஆனந்தம்! மனைவியையும் கையில் பிடித்து இழுத்தபடி ஓடிவந்து முகட்டைப் பார்த்தோம்....

என்ன அநியாயம்...!

உலகம் இப்படி மாறிவிட்டதா...!?

அங்கே... எட்டுப்பத்து எலிகளும் ஒன்று கூடி எங்கள் பன்றிக்குட்டியாகிய பூனையாரைக் கடித்துக் குதறி அறுவைச் சிகிச்சை செய்து கொண்டிருந்தன.

எப்போதும் பூனைமாத்திரம் எலிகளைப் பிடித்துக் கொண்டிருக்க முடியுமோ...?எங்கள் நாட்டு நிலைமையால் வீட்டு எலிகள்கூட கொஞ்சம் வித்தியாசமாகச் சிந்திக்கத் தொடங்கிவிட்டனவே! ★

-- குமார் தனபால் --

# பிறந்த மண்ணில் அகதிகளானோர் அவலம் தீர்க்கும் இணுவில் ஆச்சிரமம்

அமைதியும் சாந்தமும் குடிகொண்டுள்ள அந்த ஆச்சிரமப் பிராந்தியத்துள் - அமைதியின்றி அங்குமிங்கும் ஓடித் திரியும் பச்சிளம் பாலகர்கள், நாளைஎன்ன செய்வோம் என்று போக்கிடமின்றித் தவிக்கும் குடும்பத் தலைவர்கள் - தாய்மார்கள்.

சைக்கிளை வாசலில் வைத்துப் பூட்டிவிட்டு உள்ளே நுழைந்து பெண்கள் துணிமணிகளை இனம் பிரிக்கப்படுவதை மேற்பார்வை செய்து கொண்டு நிற்கும் அந்த 60 வயது மதிக்கத்தக்க பெரியாரிடம் என்னை அறிமுகப்படுத்திக் கொள்கிறேன்.

சாந்தமே உருவான அந்த கிறிஸ்தவப் பிதா வண. சாம் தேவரட்ணம் அல்பிரட் என்னை அன்புடன் வரவேற்று அமர வைக்கின்றார்.

அமர்ந்து பேசும் வலு விழந்து அங்கு நிறைந்து நிற்கும் அகதிகளைப் பார்த்து ஏங்கி நிற்கும் என்னைக் கிறிஸ்தவ பிதாவின் வார்த்தைகள் நினைவுலகிற்குக் கொண்டு வந்தன.

1939 இல் வண. பிதா செல்வரட்ணம் அவர்களால் கிறிஸ்தவ வழிபாட்டுக்காகவும் வணக்கம், ஞான ஒடுக்கம், கிறிஸ்தவ ஆராய்ச்சிகளுக்காகவும் ஆரம்பிக்கப்பட்டது இணுவில் கிறிஸ்தவ சேவா ஆச்சிரமம்.

இன்று அடிபட்டு, உதைபட்டுத் திக்கற்றவர்களாக, வீடுவாசல்களை இழந்து உடுத்த உடுப்புடன் வெளியேறி அகதிகளாகியுள்ள 400க்கு மேற்பட்ட மனித உயிர்களுக்கு அபயமளித்து ஆதரவு கொடுத்து அன்புடன் அணைத்துக் கொண்டுள்ளது அந்த ஆச்சிரமம்.

வண. பிதா சாம் தேவரட்ணத்திடம் இந்த அகதிகளின் நிலை பற்றிக் கேட்டேன். இதோ அவர் கூற்று:-

**அகதிகள் வருகை**

கடந்த மே மாதம் இரண்டாம் வாரத்தில் 12 பேர் அகதிகளாகி இங்கு வந்து தஞ்சம் புகுந்தனர். அவர்களை ஆதரித்து அனுப்பி ஒரு சில நாள் கூட இல்லை. மே 26 ஆம் திகதி இரவு ஒரு பெருங்கூட்டம் ஆச்சிரமத்தை நோக்கி அபயகரம் கேட்டு வந்தனர்.

குழந்தைகளைத் தூக்கிக் கொண்டும் நடக்க முடியாத வயோதிபர்களைச் சுமந்து கொண்டும், வாடிக் களைத்து சோர்ந்த முகத்துடன் வந்தவர்களை அன்பாக வரவேற்றோம்.

திடீரென வந்த கூட்டத்துக்கு இரவு உணவு அளிக்கத் துடித்தேன். என் உதவியாளர்களை அனுப்பிக் கடையில் அரிசியை விலை கொடுத்துப் பெற்றுவிட்டேன். ஆனால் மரக்கறி ஓரிடமும் கிடைக்கவில்லை. பப்பாக்காயினைப் பருப்புடன் கலந்து சாம்பார் தயாரித்து அனைவருக்கும் வழங்கினேன்.

அடுத்தடுத்தநாள் அகதிகளின் வருகை அதிகரித்தது. மயிலிட்டி, கீரிமலை, தெல்லிப்பளை, மாவிட்டபுரம், வல்வெட்டித்துறை, தோப்பூர் போன்ற இடங்களில் இருந்து 400க்கும் அதிகமானவர்கள் வந்து குவிந்தனர்.

**நிவாரண உதவிகள்**

அகதிகள் வருகையை அறிந்த பொதுஸ்தாபனங்கள், கல்லூரிகள், வழிபாட்டு நிலையங்கள், பொதுமக்கள் அகதிகளுக்கு வேண்டிய உதவிகளையும் பொருள்களையும் தாமாகவே முன்வந்து அன்பளிப்புச்செய்து வருகின்றனர்.

> “ஒரு கர்ப்பிணிப் பெண்ணுக்கு, வந்த ஓரிருநாட்களில் கர்ப்பச்சிதைவு ஏற்பட்டது. எமது சேவகர்களும், அகதிகளான பெண்களும் அவருக்கு உடனடி உதவிபுரிந்து வைத்தியசாலைக்கு அனுப்பி வைத்தனர்.”

யாழ்ப்பாண மாவட்ட தென் இந்திய திருச்சபை ஏனைய திருச்சபைகள், நிவாரண உதவி ஸ்தாபனம், யாழ்ப்பாண கிறிஸ்தவ ஐக்கிய சங்கம், பொது ஸ்தாபனங்கள், இந்துமத நண்பர்கள் தனித்தனியாக பல்வேறு உணவு, உடை, பொருள்களையும் நிதிகளையும் உதவியுள்ளனர்.

புதிதாகத் தெரிவுசெய்யப்பட்ட கொழும்பு அத்தியட்சகர் வண. ஞானப்பிரகாசம் நேரில் வந்து பார்வையிட்டு ஆறுதல் வழங்கினார்.

உடுவில் மகளிர் கல்லூரி மாணவிகள், உரும்பராய், தாவடிப் பகுதிகளைச் சேர்ந்த சாயி பாபா சமித்திய சங்கத்தினரும் உதவிகளை வழங்கியுள்ளனர்.

அகதிகள் வந்த அன்று இரவு சமைத்த உணவுகள் மிச்சமாகின. ஆனால் அடுத்தடுத்த தினங்களில் அவை பற்றுமல் போயின. காரணம் அயலில் உள்ள மக்களும் இலவச உணவுக்காக வந்துவிடுகின்றனர். எனவே அகதிகளுக்குச் சாப்பாடுவழங்குமுன் பட்டியல் படி கார்ட் வழங்கி சாப்பாடு கொடுக்கும்போது அவற்றைத் திரும்பப் பெற்றுக் கொள்கிறோம். இந்த நடைமுறைக்குப் பின் பிரச்சினை எழவில்லை என்றார்.

**மருத்துவ வசதி**

அகதிகளுக்கு வேண்டிய மருத்துவ வசதிகளை மானிப்பாய் கிறீன் வைத்தியசாலையைச் சேர்ந்தவர்கள் வழங்குகின்றனர்.

தெல்லிப்பழை ஆஸ்பத்திரி டாக்டர் சோமசுந்தரம், உரும்பராய் டாக்டர் திருமதி நடராசா போன்றோர் இரண்டு முறை வைத்திய பரிசோதனைகளை நடத்தி இலவசமாக சிகிச்சைகளை நடத்தியுள்ளனர். மருந்துகளையும் அவர்களே வழங்கியுள்ளனர்.

சென். ஜோன்ஸ். அம்புலன்ஸ் பிரிவினரும் தேவையான முதலுதவிகளைப் புரிந்து வருகின்றனர்.

**கர்ப்பிணிகள் நோயாளர்கள்**

சிறுவர்களைத் தவிர பல நோயாளர்கள், கர்ப்பிணிகள், வயோதிபர்களும் இங்கு காணப்படுகின்றனர்.

புத்தூர் கிராமத்திலிருந்து இரண்டு வயோதிபர்கள் நடந்து வந்துள்ளனர்.

பத்துக்கும் மேற்பட்ட கர்ப்பிணிகளும் உள்ளனர். இவர்களுக்கு வேண்டிய மருத்துவ வசதிகளைச் செய்து கொடுத்துள்ளோம்.

ஒரு கர்ப்பிணிப்பெண்ணுக்கு வந்த ஓரிருநாட்களில் கர்ப்பச்சிதைவு ஏற்பட்டது. எமது சேவகர்களும், அகதிகளான பெண்களும் அவருக்கு உடனடி உதவி புரிந்து வைத்தியசாலைக்கு அனுப்பி வைத்தனர்.

அகதிகளுக்கு [illegible] எமது ஆச்சிரம ஊழியர்களுக்கு அகதிகளாக வந்துள்ள பெண்கள் பலவித உதவிகளை செய்கின்றனர்.

125 குழந்தைகள் வரை இங்கு குவிந்துள்ளனர். அவர்களுடைய கல்வி வசதி பாதிக்கப்பட்டுள்ளது.

**அகதிகள் வருகை தொடர்கிறது**

அகதிகள் தொடர்ந்தும் வந்து கொண்டே இருக்கின்றனர். ஆனால் இங்கு இடவசதி இல்லாமலுள்ளது. சமீபத்தில் கூட ஒரு கர்ப்பிணிப் பெண் பிள்ளைகளுடன் வந்தார். இங்கு இடமில்லை எனக் கூறி அனுப்பிவிட்டேன். இரவு முழுதும் அச்செயல் எனக்கு வேதனையளித்து நித்திரையை இழக்கச் செய்தது.

இன்று எமது ஊழியர்களை அனுப்பி அவர்களைத் தேடிப் பிடித்துக் கொண்டு வந்தேன். கஷ்டப்பட்டும் அவர்களை வைத்திருக்க முடிவு செய்தேன். சுகவீனம் காரணமாக அப்பெண்ணை ஆஸ்பத்திரியில் சேர்த்துவிட்டு, பிள்ளைகளை மட்டும் என்னுடன் சேர்த்து வைத்துள்ளேன்.

அகதிகளை என்ன செய்வது? எத்தனை நாட்களுக்கு அவர்கள் அகதிகளாக இருப்பது - மீண்டும் அவர்களைத் தம் சொந்த வீடு வாசல்களுக்கு எப்படித் திருப்பி அனுப்பி வைப்பது என்ற சிந்தனை - ஏக்கம்- செயற்பாடு ஆகியன அந்த அமைதியும் சாந்தமும் குடிகொண்ட வண பிதாவின் மனதில் இன்று சஞ்சலத்தினை ஏற்படுத்தியுள்ளது.

கர்த்தரின் கருணையும், கடவுளின் கிருபையும் அங்கு அகதிகளாயுள்ள அத்தனை பேருக்கும் என்றாவது ஒரு நாள் கிடைத்தே தீர வேண்டும் என [illegible] மனதும் ஒரு நிலையில் இல்லாது தவித்தது. ★

வி. பி. சர்மா



கணவன்:- இந்த டிரைவரை வேலையில் இருந்து நீக்க வேண்டும். மிக வேகமாகக் காரை ஓட்டுகிறான். மூன்று முறை என்னைக் கொல்லப் பார்த்தான்.

மனைவி:- இன்னும் ஒரு சான்ஸ் கொடுத்துப் பார்க்கலாமே?

## நிறுத்திவிடச் சொல்லுங்கள்!

பக்கத்து வீட்டான் பாரியாரை ஏசுகின்றான்,
பார்த்திருக்க வேண்டும் பொறுமையுடன்;
உள்வீட்டுப் பிரச்சினையில் தலையிடுதல் நன்றன்று;
நள்ளிரவில் மதுவெறியில் நையப்புடைக்கின்றான்
அதையும் நீ பொறுமையுடன் பார்த்திருப்பாய்,
இன்னொரு நாள் மதுவெறியில் நிலையிழந்து
தன் மனைவி கழுத்தில் கைவைத்து நெரிக்கின்றான்
இப்போதும் உள்வீட்டுப் பிரச்சினை தான்
என்றிருப்பார் மனிதரில்லை.
நிறுத்துங்கள் வன்செயலை எனக்கத்துகின்றீர்!
நிறுத்தியா விட்டார்கள் இனக்கொலையை ?
சுதந்திர தேவதைக்குக் கொடுத்த பலி
இன்னுமா போதவில்லை?
நடுநிசியில் ஒரு ஷெல்லின்
அதிர்கேட்டு விழித்தெழுந்து,
தடுமாறி உயிர்காக்க ஓடி ஒளிக்க முன்னே
மறுசோடி ஷெல் விழுந்து
மண்டை பிளந்து மாண்டவர்கள் ஏராளம்.
உங்கள் உணவும், மருந்தும் எரிபொருளும்
எங்களுக்குக் கிடைக்கு முன்னே
ஒன்றை மட்டும் செய்திடுங்கள்
ஷெல் அடியை உடனடியாய்
நிறுத்திவிடச் சொல்லுங்கள்
முடியாவிட்டால்
ஒரே முறையில் குண்டுகளைப் பொழிந்து
எம்மை அழித்துவிடச் சொல்லுங்கள்.

ப. தேவேந்திரன்



ஒருவர்:- இந்தியக் கப்பல் வந்தாலும் வந்தது, என்னுடைய மனிசிக்குப் பெரிய கவலையாய்ப் போச்சு.

மற்றவர்:- ஏன் கப்பலில் உணவுப் பொருள் வாறது அவவுக்குப் பிடிக்கேல்லையே?

ஒருவர்:- காஞ்சிபுரம் சேலையும், சேலம் முடியயிரும் வரயில்லை என்று அவளுக்கு ஒரே கவலை.

—ரட்ணு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ளூர் உற்பத்திக்கு ஆதரவு தாருங்கள்




சிறிய பார்சோப் (300 கிராம்)
விலை ரூபா 6/- மட்டுமே!
20 மேலுறைகளை அனுப்பி அழகிய தொப்பி ஒன்றை இனமாகப் பெற்றுக்கொள்ளுங்கள்.
மில்க்வைற் -- யாழ்ப்பாணம்.

# சஞ்சீவி

27 - 06 - 1987 சனிக்கிழமை

தொழில்
''தொழிலில் இழிவு இல்லை. தொழில் எதுவும் செய்யாமல் இருப்பதுதான் இழிவு''
— டால்ஸ்டாய்

10 மில்க்வைற் நீலசோப் அல்லது
2 பார்சோப் அல்லது
2 சுப்ப மில்க்வைற்சோப் மேலுறைகளை அனுப்பி ''வெற்றிவேற்கை'' என்ற நூலைப் பெற்றுக்கொள்ளுங்கள்
மில்க்வைற் - யாழ்ப்பாணம்.



யாழ் மாவட்ட சிவில் நிர்வாக இணைப்பு அதிகாரி திரு. லயனல் பெர்னாண்டோ, ஸ்ரீலங்கா செஞ்சிலுவைச் சங்கப் பிரதிநிதிகள், கொழும்புப் பத்திரிகையாளர்கள் ஆகியோர் காங்கேசன் துறைமுகத்தில் இந்திய நிவாரணப் பொருள்கள் இறக்கப்படுவதைப் பார்வையிட்டபோது எடுக்கப்பட்ட படம். (உ) (படம்:- ஜெயம்)

## காங்கேசன் ஊழியருக்கு சம்பளம்!

யாழ்ப்பாணம், ஜூன் 27

காங்கேசன் துறை சிமெந்து கூட்டுத்தாபன ஊழியர்களுக்கான சம்பளம் இன்று சனிக்கிழமை சுன்னாகம் லயன்ஸ் கழகத்தில் வைத்து வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (உ-ள)



காங்கேசன் துறைமுகத்தில் இருந்து வெளியே வந்த இந்திய உயர் அதிகாரிகளையும், செஞ்சிலுவைச் சங்கப் பிரதிநிதிகளையும் வரவேற்பதற்காக தெல்லிப்பளையில் குழுமி இருந்த பொதுமக்கள் ஒரு பகுதியினரை படத்தில் காணலாம்

### அரச அறிக்கை இப்படிக் கூறுகிறது:

# ஒரு லட்சத்து 26 ஆயிரம் தமிழர்களே அகதிகள்

யாழ்ப்பாணம், ஜூன் 27

கடந்த மார்ச் மாதம் வரையிலும் 37 ஆயிரத்து 257 குடும்பத்தைச் சேர்ந்த ஒரு லட்சத்து 26 ஆயிரம் தமிழர்கள் அகதிகளாக்கப்பட்டுள்ளனர் என்று புனர்வாழ்வு அமைச்சின் அறிக்கை ஒன்று தெரிவிக்கின்றது.

1983 ஆம் ஆண்டு கலவரத்தின் பின் அகதிகளாக்கப்பட்டோரின் எண்ணிக்கையே இது.

9 ஆயிரத்து 913 குடும்பங்களைச் சேர்ந்த 43 ஆயிரத்து 823 தமிழர்கள் 79 அகதி முகாம்களிலும், 27 ஆயிரத்து 344 குடும்பங்களைச் சேர்ந்த 82 ஆயிரத்து 180 தமிழர்கள் முகாம்களுக்கு வெளியேயும் அகதிகளாக உள்ளனர்.

—இவ்வாறு அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ-ள)

## வழமைபோல் ஷெல் தாக்கு

யாழ்ப்பாணம், ஜூன் 27

யாழ் கோட்டை இராணுவ முகாமில் இருந்து நேற்று ஷெல் தாக்குதல்களும் துப்பாக்கிப் பிரயோகங்களும் வழமை போல் மேற்கொள்ளப்பட்டன.

இதனால் ரவிச்சந்திரன் (வயது 23) என்பவர் காயமடைந்ததுடன் கடை ஒன்றும் சேதமடைந்தது.

நேற்று மாலை நான்கு மணி அளவில் இச்சம்பவம் நடைபெற்றது.

மூன்று ஷெல் குண்டுகள் கொட்டடிப் பகுதியில் விழுந்து வெடித்தன. (உ-10)

## கிளிநொச்சி அமைப்புகள் கூட்டம்

யாழ்ப்பாணம், ஜூன் 27

பாதிக்கப்பட்ட கிளிநொச்சிப் பகுதி மக்களின் அவல நிலையை எடுத்துக் கூறும் மகஜர் ஒன்று இந்தியத் தூதுவருக்கு அனுப்பி வைக்கப்பட இருக்கிறது.

இது சம்பந்தமான ஆலோசனைக் கூட்டம் ஒன்று நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 10.00 மணிக்கு யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி குமாரசாமி மண்டபத்தில் நடைபெறும்.

கிளிநொச்சி பகுதி சமூக சேவை அமைப்புக்களின் பிரதிநிதிகள் (ஒவ்வொரு அமைப்பிலும் இருவர் வீதம்) கூட்டத்திற்கு சமூகம் தருமாறு முன்னாள் கிராம அபிவிருத்திச் சபைத் தலைவர் திரு. மா. கணபதி அழைப்பு விடுத்திருக்கிறார். (உ)

## நிவாரண உதவி வழங்கும் முறை

யாழ்ப்பாணம், ஜூன் 27

இன்று ஆரம்பித்து வைக்கப்பட உள்ள இந்திய நிவாரணப் பொருள் விநியோகம் பின்வரும் அடிப்படையில் வழங்கப்படும்.

5 பேருக்கு மேல் உள்ள குடும்பம் ஒன்றுக்கு:-

10 கிலோ சீனி, 10 கிலோ அரிசி, 12 கிலோ மா, 1 லீற்றர் பாம் ஒயில், 1½ கிலோ பால் பவுடர், ½ கிலோ புளி, 2 கிலோ பருப்பு, 1 லீற்றர் மண்ணெண்ணெய், 1 டசின் தீப்பெட்டி.

5 பேருக்கு குறைவாக உள்ள குடும்பம் ஒன்றுக்கு:-

6 கிலோ சீனி, 6 கிலோ அரிசி, 8 கிலோ மா, ½ லீற்றர் பாம் ஒயில், 1 கிலோ பால் பவுடர், ½ கிலோ புளி, 1 கிலோ பருப்பு, 1 லீற்றர் மண்ணெண்ணெய், ½ டசின் தீப்பெட்டி. (இ)

## காங்கேசனில் கொழும்பு செய்தியாளர்கள்

யாழ்ப்பாணம், ஜூன் 27

காங்கேசன் துறையில் தரித்து நிற்கும் இந்தியக் கப்பல்களைப் பார்வையிட கொழும்புச் செய்தியாளர்களும், ரூபவாஹினிக் கூட்டுத்தாபனச் செய்தியாளர்களும் நேற்று வந்திருந்தனர்.

இவர்களை இலங்கை அரசு விமானம் மூலம் பலாலிக்கு கூட்டி வந்தது. (உ-ள)

## சேதங்களை பார்வையிட்டார்

யாழ்ப்பாணம், ஜூன் 27

யாழ்ப்பாணம் வந்துள்ள இந்திய தூதரக முதலாவது செயலாளர் திரு. பூரி யாழ்ப்பாணத்தில் வன்செயல்களால் பாதிக்கப்பட்ட இடங்களில் பலவற்றை நேரில் பார்வையிட்டார்.

மல்லாகம் அகதிகள் முகாம், ஷெல் தாக்குதலினால் சேதமுற்ற தெல்லிப்பளை வைத்தியசாலை, விமானத் தாக்குதலினால் சேதமுற்ற வண்ணை சிவன்கோவில் என்பவற்றையும் அவர் பார்வையிட்டார். (உ-ள)

## நட்வர்சிங்கிற்கு டிக்ஸிற் விளக்குவார்

புதுடில்லி, ஜூன் 27

யாழ். குடாநாட்டுக்கு மேலும் உணவுப் பொருள்களை அனுப்புவது குறித்து இந்தியத் தூதர் டிக்ஸிற், இணை அமைச்சர் நட்வர்சிங்குடன் பேச்சுக்கள் நடத்த இருக்கிறார்.

- இப்படிப் புதுடில்லி வட்டாரங்கள் தெரிவித்தன.

இனப்பிரச்சினை பற்றிய பிந்திய நிலைமையையும் திரு. டிக்ஸிற் இந்திய அதிகாரிகள், அமைச்சர்களுக்கு விளக்குவார்.

- இப்படி அவ் வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன.

திரு. டிக்ஸிற் தற்சமயம் புதுடில்லியில் தங்கி இருக்கின்றார். (சு-எ)

## வடக்கு, கிழக்கு இடைத் தேர்தல்கள் கட்டாயம் நடக்கும்

### ஜே ஆர். உறுதியாக தெரிவிப்பு

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் நாடாளுமன்ற இடைத்தேர்தல்களும் உள்ளூராட்சித் தேர்தல்களும் உடன் நடத்தப்படும். அதில் மாற்றம் இல்லை.

—இப்படி ஜனாதிபதி ஜெயவர்த்தன உறுதிபடத் தெரிவித்தார்.

பிலியந்தலையில் நடந்த கூட்டம் ஒன்றில் பேசுகையிலேயே அவர் இப்படித் தெரிவித்தார்.

பொதுத்தேர்தல், ஜனாதிபதித் தேர்தல் ஆகியன உரிய காலத்தில் தான் நடத்தப்படும். அதற்கு முன்னர் நடத்தப்படமாட்டா.

—இப்படி அவர் மேலும் தெரிவித்தார். (உ-எ)

## ஜே. ஆரின் உறுதி!

கொழும்பு, ஜூன் 27

மக்களின் கருத்துப்படி நாம் நடக்கும் வரை இந்தியாவோ அல்லது வேறு நாடோ எம்மைத் தோற்கடிக்க முடியாது.

—ஜனாதிபதி ஜெயவர்த்தன இப்படிச்சொன்னார்.

கம்பஹாவில் நேற்று மாலை நடந்த சமயக் கூட்டத்தில் ஜனாதிபதி பேசினார். (உ-எ)

## செல்லுபடியான நியமனப் பத்திரங்கள்

புதுடில்லி, ஜூன் 27

இந்திய ஜனாதிபதி தேர்தலில் போட்டியிட சமர்ப்பிக்கப்பட்ட நியமனப் பத்திரங்களில் மூன்று வேட்பாளர்களினுடையவை செல்லுபடியாகக்கூடியவை என்று அறிவிக்கப்பட்டது.

அவை வருமாறு:

1. திரு. இரா. வெங்கட்ராமன், உப ஜனாதிபதி (இந்திரா காங்கிரஸ் வேட்பாளர்)

2. திரு. வி. ஆர். கிருஷ்ணஐயர் (எதிர்க்கட்சிகளின் பொது வேட்பாளர்)

3. திரு. மிதிலேஷ்குமார் (சுயேச்சை வேட்பாளர்)

வேட்பு மனுக்களை விலக்கிக் கொள்ளும் கடைசித் திகதி இன்றாகும் (உ-எ)

## விமான விபத்து

மணிலா, ஜூன் 27

பயணிகள் விமானம் ஒன்று பிலிப்பீன்ஸ் மலைப் பிரதேசம் ஒன்றில் நொருங்கி வீழ்ந்ததில் 49 பேர் உயிரிழந்தனர்.

## உதவி - - -

(1ஆம் பக்க தொடர்ச்சி)

என வகுக்கப்படுகிறது.

மனிதர்கள் எந்த நாட்டில் வாழ்ந்தாலும் மனிதர்களே என்ற மனிதாபிமான உணர்வில் செய்யப்படும் உதவி அது. ''யாதும் ஊரே யாவரும் கேளிர்'' என்ற தமிழ் வாக்கின் பாற்பட்டது.

அல்லலுறும் மக்களுக்கு அவர்கள் எந்த நாட்டைச் சேர்ந்தவர்களாயினும் உணவு உதவி அளிக்கும் நாடு பசி, பட்டினி இல்லாது செழிப்புறும்! செய்த தர்மத்திற்கு நல்வினையாக அந்த நாட்டு மக்களுக்கு நல்வாழ்வு கிட்டும்.

## ஸ்ரீலங்காவுக்கு 1,825 கோடி ரூபா கடன் வழங்க முடிவு

கொழும்பு, ஜூன் 27

ஸ்ரீலங்கா அரசுக்கு ஆயிரத்து எண்ணூற்று இருபத்தைந்து கோடி ரூபா நிதி உதவி வழங்க 'உதவும் பதினான்கு நாடுகள் அமைப்பு' தீர்மானித்துள்ளது.

- இப்படி கொழும்பு வானொலி நேற்று தெரிவித்தது.

அமைப்பின் கூட்டம் நேற்று பாரிஸில் உலக வங்கிக் கட்டடத்தில் நடந்தது.

சென்ற ஆண்டு வழங்கப்பட்ட கடனுதவியிலும் பார்க்க இம்முறை நான்கு சதவீதம் கூடுதலாக கடன் கிடைத்துள்ளது.

- இப்படி கொழும்பு வானொலி மேலும் தெரிவித்தது. (உ-எ)

## செயலக முன்றலில் உண்ணாவிரதம்

யாழ்ப்பாணம், ஜூன் 27

நேற்று யாழ். செயலக முன்றலில் பெரும் எண்ணிக்கையானோர் தமிழீழத்தையும், போராளிகளையும் இந்தியா அங்கீகரிக்க வேண்டும் எனக் கோரி உண்ணாவிரதம் இருந்தனர். (உ-ள)

## பலவத்த முகாம் உண்ணாவிரதம் கைவிடப்பட்டது

திருகோணமலை, ஜூன் 27

பலவத்த புனர்வாழ்வு முகாமில் உண்ணாவிரதம் இருந்த தமிழ் இளைஞர்கள் திருமலை பிரஜைகள் குழுவினரின் உறுதிமொழியையடுத்து உண்ணாவிரதத்தைத் தற்காலிகமாகக் கைவிட்டுள்ளனர்.

திருகோணமலை - மட்டக்களப்புப் பகுதிகளைச் சேர்ந்த சுமார் 581பேர் இந்த முகாமில் உள்ளனர்.

இவர்கள் தங்கள் விடுதலையைக் கோரி கடந்த 10ம்திகதி முதல் உண்ணாவிரதமிருந்து வந்தனர்.

திருகோணமலையைச் சேர்ந்த பெற்றோர், உறவினர்கள் இவர்களின் நிலைமை பற்றி திருமலை பிரஜைகள் குழுவிடம் முறையிட்டனர்.

இதனையடுத்து பிரஸ்தாப குழுவைச் சேர்ந்த திருமதி. சுபாஷினி வரதன், வண. பிதா. பீற்றர் குருகுல ஆராச்சி, டாக்டர். பொன்னுத்துரை, திரு. ஆறுமுகன் ஆகியோர் அடங்கிய கோஷ்டி சென்ற 16ம் திகதி பலவத்த முகாமிற்குச் சென்றது.

உண்ணாவிரதம் இருந்தோருக்கு பிரஜைகள் குழு அளித்த சில உறுதிமொழிகளை அடுத்து உண்ணாவிரதம் கைவிடப்பட்டது. (உ-எ-150)

## ஈழத் தமிழர்கள் பாரிஸில் நேற்று ஆர்ப்பாட்டம்!

ஸ்ரீலங்காவுக்கு உதவும் நாடுகளின் கூட்டம் நடந்த உலக வங்கிக் கட்டடத்துக்கு வெளியே தமிழர் அமைப்புக்கள் நேற்று ஆர்ப்பாட்டம் நடத்தின.

காலை 9 மணி முதல் மாலை 4 மணி வரை இந்த ஆர்ப்பாட்டம் நடந்தது என்று அறிவிக்கப்பட்டது.

ஆர்ப்பாட்டம் செய்த தமிழர்களைக் கடந்தே நிதி அமைச்சர் ரொனி டி மெல் கூட்டத்தில் கலந்து கொள்ளச் சென்றார். (உ-எ)

## நேற்று...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

தது.

அங்கு நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் ஈழவர் முன்னணிப் பிரமுகர்கள் உரையாற்றினர்.

அங்கு அமைக்கப்பட்டிருந்த மேடையில் வைத்து இந்திய செஞ்சிலுவைச் சங்கப் பிரதிநிதிகளிடம் மகஜர் ஒன்று கையளிக்கப்பட்டது.

யாழ் செஞ்சிலுவைச் சங்க தலைவர் திரு. பாலசுப்பிரமணியத்திடமும் மகஜர் ஒன்று கையளிக்கப்பட்டது.

அவர் அந்த மகஜரை இந்திய உயர் அதிகாரி திரு. பூரியிடம் கையளிப்பதாகக் கூறினார்.

தமிழ் ஈழத்தையும் ஈழவிடுதலைப் போராளிகளையும் இந்தியா அங்கீகரிக்க வேண்டும் எனக் கோரி குடா நாட்டின் பல பகுதிகளிலும் நேற்றும் ஊர்வலங்கள், உண்ணாவிரதங்கள் நடைபெற்றன. (உ-ள)

## சௌத்திரியின்...

(1ஆம் பக்க தொடர்ச்சி)

தது.

அங்கே தங்கியிருந்த இந்தியப் பிரதிநிதிகளிடம் மகஜர் ஒன்றை ஊர்வலத்தினர் கையளித்தனர்.

அப்போது ஒரு வயோதிபர் இந்திய செஞ்சிலுவைச் சங்கத் தலைவர் காலில் விழுந்து எமது உயிரைக் காப்பாற்றுங்கள் என்று கதறி அழுதார்.

அவரது நிலையை பார்த்து இந்திய அதிகாரி கண்கலங்கினார். ... அனைத்து ஆறுதல் கூறி ...

### செஞ்சிலுவைச் சங்கம்:

## ஸ்ரீலங்கா கிளை மீது யாழ். கிளை கண்டனம்

யாழ்ப்பாணம், ஜூன் 27

வடபகுதி தமிழ் மக்களும் யாழ். பிரதேச செஞ்சிலுவைச் சங்கத்தினரும் ஸ்ரீலங்கா செஞ்சிலுவைச் சங்கத்தால் கடந்த 4 வருடங்களாக புறக்கணிக்கப்பட்டு வருகிறார்கள்.

—இவ்வாறு யாழ். செஞ்சிலுவைச் சங்கம் ஸ்ரீலங்கா மற்றும் இந்திய செஞ்சிலுவைச் சங்க பிரதிநிதிகளிடம் எடுத்துக் கூறியது.

நேற்றிரவு ஸ்ரீலங்கா, யாழ், இந்திய செஞ்சிலுவைச் சங்க பிரதிநிதிகளுக்கான ஒரு சந்திப்பு ஞானம்ஸ் ஹோட்டலில் நடைபெற்றது. அப்போது யாழ். பிரதிநிதிகள் தமது கூற்றை ஆதாரபூர்வமான அறிக்கையுடன் எடுத்துக் காட்டினர்.

1983 டிசம்பர் மாதத்தின் பின் வட பகுதிக்கு செஞ்சிலுவைச் சங்கத்தின் எந்தவித உதவியும் கிடைக்கவில்லை.

ஸ்ரீலங்கா செஞ்சிலுவைச் சங்கத்திற்கு யாழ். செஞ்சிலுவைச்சங்க அதிகாரிகள் அனுப்பிவைத்த மகஜர்கள் கூட கவனத்தில் எடுத்துக் கொள்ளப்படவில்லை.

தாய்ச் சங்கத்தின் அனுமதியின்றி யாழ். செஞ்சிலுவைச் சங்கம் ஜெனீவாவிலுள்ள சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்திடம் நேரடியாக எந்த வித உதவியையும் பெற முடியாது கஷ்டப்பட்டது.

—இவ்வாறு தெரிவிக்கப்பட்டது. (உ-ள)





வியாழன் காங்கேசன்துறையிலிருந்து யாழ்ப்பாணம் வரும் வழியில் இந்தியத் தூதரக அதிகாரி திரு. பூரி, யாழ் செஞ்சிலுவைச் சங்க அதிகாரி திரு. பாலசுப்பிரமணியத்துடன் அளவளாவுவதை மேற்படத்திலும், யாழ் போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் டாக்டர் எஸ். நச்சினார்க்கினியன் இந்தியச் செஞ்சிலுவைப் பிரதிநிதி ஒருவருடன் அளவளாவுவதை இரண்டாவது படத்திலும் காணலாம். (உ) (படம்:- ஜெயம்)

இப் பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேஷன்ஸ் (பிறைவேற்) லிமிடெட் ஸ்தாபனத்தாரால், யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2, இலக்கத்தில் உள்ள அவர்களது அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது. வெளியிட்ட திகதி: 27-06-1987.

Printed and Published by New Uthayan Publications (Pvt) Ltd at 292/2 Navalar Road, Jaffna on Saturday June 27, 1987

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org